DMC

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்


# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 09 | 25-08-94 | வியாழக்கிழமை | ஓசை 188


## கடற்கரும்புலி அங்கயற்கண்ணி நினைவுக்கல் நாட்டல்

காங்கேசன் துறைமுகத்தினுள் சென்று கரும்புலித் தாக்குதல் நடாத்தி சிறிலங்காக் கடற்படையின் தாய்க் கப்பலினையும், டோறாப் படகினையும் தகர்த்தெறிந்தபோது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட முதல் பெண் கடற் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியினது வித்துடல் கிடைக்கப்பெறாததினால் அவரது உருவப்படம் நாளை பி. ப 4. 00 மணிக்கு அவரது தற்போதைய இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல் லப்பட்டு, கொக்குவில் மேற்கு ஞான [6ஆம் பக்கம் பார்க்க]

# வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்குவது குறித்து புதிய அரசு பரிசீலனை

## பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆலோசனை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்குவது தொடர்பாக புதிய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், இது தொடர்பாக சகல தரப்பு பாதுகாப்பு அதிகாரிகளுடனும் விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் சிறிலங்காவின் புதிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

அமைச்சுப்பொறுப்புக்களை ஏற்ற பின்னர் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த இவ்வாறு தெரிவித்ததாக பிரான்ஸ் செய்திஸ்தாபனத்தை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது-

மேலும் அச்செய்தி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியை நேற்று உத்தியோக பூர்வமாக, தான் ஏற்றுக் கொண்டதாகவும், இதில் நடைபெற்ற முதலாவது அதிகாரிகள் மாநாட்டில் யாழ் குடாநாட்டின் மீது விதிக்கப்பட்ட சகல பொருளாதார தடையும் நீக்கப்படுவது தொடர்பாக சகல பாதுகாப்பு அதிகாரிகளுடனும் விரிவான பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அமைச்சர் அனுருத்த ரத்வத்த கூறியதாகக் குறிப்பிட்டது.

நீண்டகாலமாக விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடை மற்றும் பொருள்கள்கொண்டு செல்வதில் விதிக்கப்பட்ட தடைகளினால் வடபகுதி மக் (6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் முதல் நடவடிக்கை யுத்தத்திற்குத் தீர்வு காண்பதே

### -பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

எமது அரசாங்கத்தின் முதல் நடவடிக்கையாக இருப்பது வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்திற்கு ஒரு தீர்வைக் காண்பதாகும் இதற்காக நாம் எதையும் செய்யத்தயாராயிருக்கிறோம் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் வமான ஒத்துழைப்புத்தேவை பிரதமர் சந்திரிகாவின் அழைப்பை ஏற்று உயிரிழப்புகளுடன் தொடரும் இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர புலிகள் ஒத்துழைப்பார்கள் என்பதில் உறுதியான நம்பிக்கை உண்டு எனவும் அவர் தெரிவித்தார் (6ஆம் பக்கம் பார்க்க)

அதிகார துஷ்பிரயோகம்;

## பொலிஸ் அதிகாரிகள் மீது

## யாழ். மாவட்ட தேர்தல் குறித்து முஸ்லிம் காங். ஆட்சேபனை மனு

### விரைவில் தாக்கலாகும் என்கிறார் அமைச்சர் அஷ்ரப்

(கொழும்பு)

யாழ் மாவட்ட தேர்தல் குறித்துதேர்தல் ஆட்சேபனை மனுவொன்றை முஸ்லிம் காங்கிரஸ் தாக்கல் செய்யுமென துறைமுக, கப்பல் துறை. புனர்வாழ்வு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், அம்பாறை மாவட்டத்தில் புதிய துறைமுகம் அமைக்கப்படும். இன்னும் ஓரிரு தினங்களில் அங்கு துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கான இடமொன்றை தெரிவுசெய்ய அதிகாரிகள் குழு ஒன்று அங்கு செல்லும். ஒரு வாரத்தில் இக்குழு அறிக்கை சமர்ப்பிக்கும். இவ் அறிக்கை கிடைத்ததும் துறைமுக வேலைகள் ஆரம்பமாகும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற கூட்டம் ஒன்பது மணிக்கு ஆரம்பம்

(கொழும்பு)

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

சபை கூடியதும் முதல் நடவடிக்கையாக சபாநாயகர் தெரிவுசெய்யப்படுவார் அவர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார். இதன்பின்னர் சகல பாராளுமன்ற அங்கத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சித் தலைவராக காமினி

## ஐ.தே. கட்சியினால் நேற்று தெரிவு

வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்திற்கு ஒரு தீர்வைக் காண்பதாகும் இதற்காக நாம் எதையும் செய்யத்தயாராயிருக்கிறோம் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளார்.

அமைச்சைப்பொறுப்பேற்ற பின்னர் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் இதற்கு விடுதலைப்புலிகளின் ஆக்கபூர்

டன் தொடரும் இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு

அவர் தெரிவித்தார்

(6ஆம் பக்கம் பார்க்க)

அதிகார துஷ்பிரயோகம்;

## பொலிஸ் அதிகாரிகள் மீது விசாரணை செய்யக் குழு

பொதுத்தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்னரும் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகள் பற்றி முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகபிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த சிரேஸ்ட அதிகாரிகள் குழுஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி அனுமதி அளித்துள்ளார்

குற்றவாளிகளாகக் காணப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ்மா அதிபரினால் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்

## ஊழல் புகார் பற்றி விசாரணை நடைபெறும்

(கொழும்பு)

நீர்ப்பாசன, மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சில் ஊழல் பற்றிய பொதுமக்களது புகார்களின் பேரில் விசாரணைகள்நடத்தி தவறிழைத்தோர் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என, மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் ஒருசிலருக்குமட்டுமல்ல, நாட்டுமக்கள் அனைவருக்கும் சேவைசெய்ய முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வட-கிழக்கு ஆளுனராக ஹுருலே நியமனம்

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் புதிய ஆளுனராக ஈ. எல். பி. ஹுருலே நியமிக்கப்பட இருக்கின்றார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின்ஆளுனர்லயனல்பெர்ணாண்டோவிற்கு புதிய பதவி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அவரின் இடத்திற்கு வடமேல் மாகாண ஆளுனர் ஹுருலே நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வடமேல் மாகாணசபை ஆளுனராக மைத்திரி பால சேனநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார் என்றும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## லேக்ஹவுஸ் பணிப்பாளராக லயனல் பெர்னான்டோ

தகவல் அமைச்சின் செயலாளராகவும், லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை தலைவராகவும் லயனல் பெர்ணான்டோ நியமிக்கப்பட்டுள்ளார்- இவர் இன்று தனது பதவியை உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொள்வார் என தெரியவரு

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே. கட்சியினால் நேற்று தெரிவு

## பிரதித்தலைவராகவும் நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தின்எதிர்க்கட்சித்தலைவராக



முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்கா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்றக்குழு நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில்கூடியஇரகசிய வாக்கெடுப்பின்மூலம் காமினி திசாநாயக்காவைத் தெரிவு செய்தது. காமினியை எதிர்த்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா போட்டியிட்டார்- காமினி திசாநாயக்காவுக்கு ஆதரவாக 45 உறுப்பினர்களும் ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஆதரவாக 42 உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா மரபு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கட்சி யாப்பின்படி ஜனாதிபதி கட்சித் தலைவர் பதவியை வகிக்கும் போது பிரதித் தலைவர் பதவி ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தலைமை ஏற்பவர்களுக்கே வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் இப்பதவி எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசா

(6ஆம் பக்கம் பார்க்க]

## ரகசிய வாக்கெடுப்பில் ஜே. ஆரும் சமுகமளித்தார்

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கான எதிர்க்கட்சித்தலைவர் தெரிவு செய்யும் வகையில் நேற்று நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன கலந்து கொண்டார் என தெரிய வருகின்றது.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் தலைமையில் மேற்படி வாக்கெடுப்பு நடைபெற்றதாகவும் இதில் இவ் இரு ஜனாதிபதிகளும் யாருக்கு சார்பாக நடந்து கொண்டார்கள் என்பது குறித்து கருத்து தெரிவிக்க மறுத்து விட்டனர் எனவும் தெரியவருகிறது.

## வாக்களிப்பில் கூரே கலந்துகொள்ளவில்லை

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கான தெரிவு வாக்களிப்பில் முன்னாள் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சிறிசேனகூரே கலந்து கொள்ளவில்லை எனத் தெரிய வருகின்றது.

சிறிசேன கூரேயின் இந் நிலைப்பாடானது அவர் கட்சியின்நடவடிக்கையில் கொண்டுள்ள அதிருப்தியைக் காட்டுவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்

# சபாநாயகர் பதவிக்கு ஐ. தே. கவும் போட்டி?

## அனுரா நிறுத்தப்படுவார்

(கொழும்பு)

பத்தாவது பாராளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்கு ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் தமது உறுப்பினர்களை போட்டிக்கு நிறுத்தப்போவதாக தெரியவருகிறது.

ஆளும் கட்சி சார்பில் கே. பிரத்னாயக்காவும் எதிர்க்கட்சியின் சார்பில் அனுரா பண்டாரநாயக்காவும் போட்டியிடவுள்ளனர் இதனால் இன்று இரகசிய வாக்கெடுப்பு மூலம் சபாநாயகர் தெரிவு செய்யப்படவுள்ளார்

இது தமிழ்க் குழுக்களின் நிலைப்பாட்டை உரசிப்பார்க்

(6ஆம் பக்கம் பார்க்க]

## இ.தொ.கா. வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக நேற்று நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை என அக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது ஐ. தே. க. சார்பில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது இருந்த போதும் தேசியப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அதன் தலைவர் சௌ. தொண்டமான், மற்றும் ஏனைய உறுப்பினர்களான ஆறுமுகம் தொண்டமான், என். சதாசிவம்,எம். சிவலிங்கம், எஸ். இராஜரத்தினம், டி. வி. சென்னன் ஆகியோர் இவ் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என தெரிய வருகின்றது.

# பொருளாதாரத் தடையை நீக்க புதிய அரசுக்கு அதிகாரம் இல்லை

## பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சட்ட அமைப்புப் படி பார்த்தால் பொருளாதாரத் தடையை அகற்ற புதிய அரசுக்கு அதிகாரம் கிடையாதுஎனபி பி.ஸி.யின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், வடபகுதிக்கு எதிராக கடந்த நான்குஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் பொருளாதாரத் தடைகளை ஓரளவுக்கு அகற்றத் தாம்திட்டமிட்டுவருவதாக, இலங்கையின்புதிய மக்கள்கூட்டணிஅரசுகூறிவருகிறது யாழ். பகுதியைத் தமது கட்டுப்பாட்டில்வைத்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

## இ- தொ காங்கிரஸ் முடிவு செய்யவில்லை

(கொழும்பு)

சபாநாயகர் பதவிக்கு போட்டியிடும் கட்சியினரில் எவரை ஆதரிப்பது என்பது குறித்து தாம் இதுவரை எந்தவித முடிவினையும் மேற்கொள்ளவில்லைஎன இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்எஸ்-தொண்டமான் தெரிவித்துள்ளார்-

மேலும் தமதுகட்சி ஐ- தே-

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**வெளிவந்து விட்டது!**

ஆண்டு 11ற்கான சைவ நெறி துரித மீட்டல் வினாவிடை வெளிவந்து விட்டது ஆக்கம்: க. சந்திரசேகரம் ஏக விநியோகஸ்தர்கள்: ஸ்ரீ சுப்பிரமணியம் பொத்தகசாலை 235, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம் (9176)

**வீடு விற்பனைக்கு**

262, கச்சாய்வீதி சாவகச்சேரியில் 5 பரப்பு காணி சகல வசதிகளுடனான வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ. மகேந்திரம் 262 கச்சாய், வீதி, சாவகச்சேரி. (9196)

**வெளிவந்துவிட்டது வியாழன் மாற்றம்**

PROF. T. சத்தியதாஸன்கணிப்பில், ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீ காந் புத்தகசாலை நல்லூர். மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம். இந்தியாருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்துவிட்டது. சிவம் நீதிக்கதைகள் 3,4,5,6 ஆண்டு 5 கணிதம்: தமிழ் 94 வினா விடைகள் (சி-10101)


## முதலமைச்சராக மகிந்த யாப்பா

(கொழும்பு)

தென் மாகாண முதல்வரான அமரசிறி தொடங்கொட அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு மகிந்த யாப்பா அபயரத்தின் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் தமது ஆரம்பக்கல்வியை மகிந்த கல்லூரியில் பெற்றவர் என்பதோடு இலங்கை பல்கலைக்கழக பொருளியல் துறை பட்டதாரியுமாவார்.

## தொண்டர் சேவை

(கொழும்புத்துறை)

நல்லூர்ஸ்ரீகந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தில் ஐந்தாவது வருடமாக திருநெல்வேலி சைவத்தொண்டர் நிலையத்தினர் தொண்டர் சேவை ஆற்றி வருகின்றனர்.

அத்துடன் போக்குவரத்து தடை செய்யப்பட்ட சந்திகளில் உடைமைகள் (பாதரட்சைகள்) பாதுகாப்புச்சேவையும் இந்நிலையத் தொண்டர்களால் வருடாவருடம் செய்து

## தேர்தல் முடிவுபற்றிகருத்து வெளியிட ஜே.ஆர் மறுப்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தல் முடிவுகள் தொடர்பாக கருத்து எதையும் தெரிவிக்க முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா மறுத்து விட்டார்.

பொதுத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதியுடன் 'ஐலண்ட்' நாளிதழின்சார்பாகதொடர்பு கொள்ளப்பட்ட போது அவர் கருத்து எதையும் தெரிவித்து சர்ச்சை எதிலும் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை எனவும், தான் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கி நீண்ட நாட்களாகி விட்டன எனவும் தெரிவித்தார்.

## அமைச்சு ஆவணங்களை தீயிட்டு அழிக்க முயற்சி

(கண்டி)

பெரதெனியாவில் அமைந்துள்ள விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சில் இருந்த பல முக்கிய ஆவணங்களை தீயிட்டுக் கொளுத்த எடுக்கப்பட்ட முயற்சி சிற்றூழியர் ஒருவரின் தகவலையடுத்து தடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக, அமைச்சின் அதிகாரியொருவர் புதிய காணி விவசாய, வன வள அமைச்சர் தி. மு. ஜயரத்னாவுக்கு அறிவித்துள்ளார். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

சென்ற அரசின், ஊழல்களை மறைக்கும் முயற்சிகளில் இச் சம்பவமும் ஒன்றாக இருக்கலாமென கருதப்படுகின்றது.

## அலுவலகம் செல்வதற்கே மக்கள் வாக்களிப்பு

**- லக்ஷ்மன் கதிர்காமர்**

(கொழும்பு)

இப்போது நீங்கள் அதிகாரத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளீர்கள் என்று முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவிடம் ஒருவர் குறிப்பிட்டபோது அதனை இடைமறித்த அவர் அதிகாரத்திற்கு தெரிவு செய்யப்பட வில்லல ஆனால் அலுவலகத்தினுள் செல்ல வாக்களிக்கப்பட்டுள்ளது எனத் திருத்தினார். இந்த உதாரணத்தை புதிய வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திரு.கதிர்காமர் இதுதொடர்பாக மேலும் கூறுகையில், அலுவலகத்தில் இருப்பது என்பது அரசியல்வதி மீதான புனிதமான நம்பிக்கையின் பாற்பட்டதாகும் அதனை அதிகாரத்தில் இருப்பதாக அர்த்தப்படுத்திக் கொள்ளக்கூடாது எனவும் குறிப்பிட்டார்,

## சர்வோதய தொண்டர்கள் சிரமதானம் செய்வர்

[தொல்புரம்]

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலயத்தின் தேர் உற்சவத்தினையொட்டி வலிமேற்குப் பிரதேச தேசிய சர்வோதய தொண்டர்களினால் ஆலயச் சுற்றாடலில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மாலை வரை தொல்புரம் மத்தி சர்வோதய கிராமோதய சமித்தியின் தலைவர் திரு.சி சிவப்பிரகாசம் தலைமையில் மேற்கொள்ளப்படவுள்ள மேற்படி சிரமதானப் பணிகள் மூலம் ஆலயச்சுற்றாடல்கள் புனிதமாக்கப்படவுள்ளன. இந்த சிறப்புமிகு இறைபணியான சிரமதானப் பணிகளில் தொல்புரம் மத்திய சனசமூக நிலையம், தொல்புரம் மத்தி சர்வோதய சமித்தி, தேசிய சர்வோதயத்தின் வலிமேற்கு பிரதேச நிலையத்தொண்டர் குழு ஆகியன பங்குபற்றவுள்ளன. மேற்படி பணிகள் குறித்த தினத்தில் சிறப்பாக நடைபெறுவதற்கு வலிமேற்கு பிரதேச தேசிய சர்வோதய பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள், போதனாசிரியர்கள், தையல் கைப்பணிகலை பயிற்சியாளர்கள், முன்னாள் பயிற்சியாளர்கள் அனைவரையும் அன்றையதினம் காலை ஆலய முன்றலில் சமுகமளிக்குமாறு பிரதேச இணைப்பாளர் செல்வி கி யோகேஸ்வரி அவர்கள் தெரிவித்துள்ளார். [41

### யாழ்., வன்னி, திருமலை மாவட்ட

# வாக்காளர் பட்டியல்கள் திருத்தப்பட வேண்டும்

### சர்வதேச அவதானிகள் கருத்து

(கொழும்பு)

யாழ்ப்பாணம்,வன்னி, திருகோணமலை ஆகிய மூன்று தேர்தல் மாவட்டங்களிலும், வாக்காளர் பட்டியல்கள் புதிதாக தயாரிக்கப்படவேண்டும் இம்மூன்று மாவட்டங்களிலும் இறுதியாக, 1987 இலேயே வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன என சர்வதேச அவதானிகள் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரைவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற இருப்பதால் மேற் கூறப்பட்ட மூன்று மாவட்டங்களிலும் வாக்காளர் பட்டியல்கள் சாத்தியமான அளவு விரைவில் தயாரிக்கப்பட வேண்டும்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக வாக்களிப்பு நிலையங்கள் கொத்தணி முறை வரவேற்கப்படக் கூடியது என்றாலும், நடைமுறையானது உத்தேச நோக்கத்துக்கு உதவுவதாக இல்லை கொத்தணி வாக்களிப்புநிலையங்களை அமைப்பதன் மூலம் மக்களுக்கு வாக்களிப்பதற்கு வாய்ப்பை வழங்குவதாக,ஒரு எண்ணத்தை உருவாக்குவதிலும் பார்க்க, பாதிக்கப்பட்ட அப்பகுதிகள் தனது நிர்வாக கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை என்று தேர்தல் ஆணையாளர் முடிவுக்கு வருவது உகந்ததாகும்.

சுவரொட்டிகளை ஒட்டுவது தொடர்பான சட்டங்கள் தொடர்ச்சியாக அலட்சியப் படுத்தப்படுகின்றன ஒரு வேட்பாளரின் செலவுக்கு கட்டுப்பாடே இல்லை.

தேர்தல் பிரசார காலத்தில், அரசாங்க சொத்துக்கள் அல்லது வாகனங்கள் அமைச்சர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு தேர்தல் பிரசார காலத்தின் போதும் அரசாங்கத்திக்குச் சொந்தமான வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் காட்டக்கூடிய பாரபட்சத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக அரசாங்கத்துக்கு அவ் வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் ஆசிரிய பீடத்தின் மீது இருக்கும் ஆதிக்கச் செல்வாக்கை தனிமைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

## சாரணியர் விழா ரத்து

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நாளை மறுதினம் சனிக்கிழமையன்றுநடைபெறவிருந்த சாரணியர்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### கடற்றொழிலாளருக்கு ஓய்வூதியம்

(தொல்புரம்)

அராலி தெற்கு. கிழக்கு பகுதிகளின் கடற்றொழிலாளர் எதிர்கால நலன்கருதி ஓய்வூதியத்திட்டம் அறிமுகப்படுத்தி, இத்திட்டத்தில் மீனவர்களை இணைக்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வலிமேற்குஅராலி ஐயனார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கடற்றொழிலாளர் ஒய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தில் இணையும் நிகழ்வை யாழ் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் திரு எஸ்- ஏ. யோசப் அவர்கள் ஆரம்பித்து வைத்தார் இத் திட்டத்தில் சுமார் 20 பேர் வரை இணைந்து கொண்டனர்- (41)

## நடமாடும் வைத்திய பிரிவு பிரதேச சபையால் ஆரம்பம்

வேலணை பிரதேசத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சித்த ஆயுர்வேத வைத்திய சாலை நடமாடும் வைத்திய சேவை ஒன்றை அண்மையில் ஆரம்பித்துள்ளது.

மேற்படி வைத்திய சாலையைச் சேர்ந்த வைத்தியர் குழு ஒன்று வாரத்தில் இரு நாட்கள் இடம் பெயர்ந்த மக்கள் வாழும் இடங்களிற்கு நேரடியாகச் சென்று சிகிச்சை அளித்து வருகின்றது. (88)

## உதைபந்தாட்டம்

றோட்டரக்ற் கழகம், எஸ் எம் பெர்ணாண்டோ நிறுவன ஆதரவில் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு, யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் சென் அன்ரனீசை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

## நினைவு கூருகின்றோம்...

**25. 08. 1994 .**

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் 5 ம் கட்டைப் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **ரமேஸ்** (சகாயம் - மன்னார்)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**உஸ்மான்-கிழுங்கு** (அப்துல்காதர் சாதிக் - 687/3, அராலி வீதி - யாழ்)

மட்டு - வந்தாறுமூலையில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையின் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ராமு** (பிரான்சிஸ் திலகம் - கடற்கரைவீதி, பாசையூர் - யாழ்)

1989ஆம் ஆண்டு ஆவரங்காலில் தேச விரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றா

**கருணா** (சேது பூபாலசிங்கம் - புளியங்குளம், அடம்பன் - மன்னார்)

**கிருபாகரன்** (பெரியகறுப்பன் காளிமுத்து - உடையார்வேலித்தோட்டம் - மலையகம்)

**தர்சன்-நந்தன்** (ஜோசப் அலெக்சாண்டர் - ஏயாப்போஸ்ட் - மலையகம்)

**கருணாநிதி** (சர்வகுலராசா சிவரூபன் - சித்தங்கேணி - யாழ்)

**விஸ்வநாத்** (கணேசன் மயில்வாகனம் - கொட்டடி - யாழ்)

**ராஜ்** (தங்கவேலாயுதம் ஜெயராஜ் - மயிலிட்டி - யாழ்)

**பைரவன்** (விசுவலிங்கம் விமலகுமார் - கூழாவடி, ஆனைக்கோட்டை - யாழ்)

**சூட்டி** (கணபதிப்பிள்ளை யோகேந்திரராஜா - கொடிகாமம் - யாழ்)

**நடிகன்-ராஜீவ்காந்தி** (நடராசா திருஞானமூர்த்தி - தாளையடி - யாழ்)

**ரவிசங்கர்** ( -- — யாழ்ப்பாணம்)

**சுபாஸ்** (குலசிங்கம் விஜயராசன் - 4-ம் வட்டாரம், வேலணை கிழக்கு)

**வேல்ராஜ்** (சிவராசா சுதாகிருஷ்ணா - கலட்டி - யாழ்)

சைகள்) பாதுகாப்புச்சேவையும் இந்நிலையத் தொண்டர்களால் வருடாவருடம் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (24)

## ஊர்காவல்படையில் 13,523 பேர்

(கொழும்பு)

இலங்கையிலே மொத்தமாக 13523 ஊர்காவல் படைவீரர்கள் இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆண்களும், பெண்களும் இந்த எண்ணிக்கையில் அடங்குவர் எனவும் அது தெரிவித்துள்ளது.

## கட்டாக்காலிகளால் தொல்லை

(தொல்புரம்)

மூளாய், பொன்னாலை பகுதிகளில் சிறு பயிர் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் தோட்டக் காணிகளுக்குள் கட்டாக்காலி கால்நடைகள் புகுந்து பயிர்களை அழித்து வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதிகளில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பல இன்னல்கள் மத்தியில் மேற்கொண்டு வரும் பயிர்ச் செய்கையை முற்று முழுதாக நிறைவேற்ற பெருந்தடையாக இருந்து வரும் இந்த கட்டாக்காலி ஆடுகள், மாடுகள் போன்ற கால்நடைகளால் வளரும் பயிர்கள் அழிக்கப்படுகின்றன. இந்த நிலைமை தொடர்ந்தும்நீடிக்குமானால் எமது பொருளாதார வளர்ச்சி குன்றுவதோடு, தானிய உற்பத்தியும் பாதிக்கப்படலாம் என அஞ்சப்படுகிறது. மேலும்கால்நடைகளை வளர்ப்போர் இந்த விடயத்தில் அக்கறையின்றி இருப்பார்களேயானால் விவசாய உற்பத்தியில் பெரும் நஷ்டத்தினை அடையநேரிடும் என அப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (41)

டல்கள் புனிதமாக்கப்படவுள்ளன. இந்த சிறப்புமிகு இறைபணியான சிரமதானப் பணி

பிரதேச இணைப்பாளர் செல்வி கி யோகேஸ்வரி அவர்கள் தெரிவித்துள்ளார். [41

# பிரதி அமைச்சர்கள் 21 பேர் இன்று பதவியேற்பார்கள்

(கொழும்பு)

புதியதாக தெரிவு செய்யப்பட்டுள்ள அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்பட்டுள்ள பிரதி அமைச்சர்கள் இன்று பிற்பகலில் பதவியேற்கவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதி அமைச்சர்களாக 21 பேர் நியமிக்கப்படுவார்கள் என்றும், ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, டி.ஜே. செனவிரத்தினா, பேட்டி பிறேம்லால் திசாநாயக்க மகிந்த விஜேசேகர, சாமல் ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார, சுமித ஜெயசேன, எஸ். டி. ஆர், ஜயரத்தினா, எஸ். பி நாவின்ன போன்றோர் பிரதி அமைச்சர்களாக நியமனம் செய்யப்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதி அமைச்சர்களின் பட்டியல் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும், இது பரிசீலனைக்காக மூத்த அமைச்சரும், பிரதமரின் ஆலோசகருமான திருமதி சிறிமாவோவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் கூற படுகிறது.

இதேவேளை அமைச்சர்களுடன் அவர்களது கடமைகள் மற்றும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தொடர்பாக பிரதமர் திருமதி சந்திரிகா விவாதித்து இருப்பதாகவும் தெரியவருகிறது.

# எதிர்க்கட்சி தலைவராக காமினி திசாநாயக்க தெரிவு

சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக ஐ தே கவின் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் காமினி திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று ஐ தே கவின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் நடைபெற்ற வாக்களிப்பின் மூலம் இவர் இப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டார்- இக்கூட்டத்திற்கு ஜனாதிபதி டி-பி விஜேதுங்கா தலைமை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது-

இப் பதவிக்கான தெரிவு தொடர்பாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், காமினிக்கும் இடையே பலத்த போட்டி நிலவியது தெரிந்ததே.

# வெளிநாட்டு சேவையில் அரசியல் நியமனம் இராது

(கொழும்பு)

இலங்கையின்வெளிநாட்டுச் சேவையிலுள்ள பதவிகளில் 75 சதவீதமானவை தொழில்சார் இராஜதந்திரிகளுக்கே ஒதுக்கப்படும் என வெளியுறவுத்துறைஅமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

வழமையான, வெளிநாட்டுப் பதவிகள் அரசியல் நியமனங்களின் மூலம்வழங்கப்பட்டு வந்த நிலை மாற்றமடையும் எனவும் தெரிவித்துள்ளார்.

யூர் - யாழ்)

1989ஆம் ஆண்டு ஆவரங்காலில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

**க. இந்திரன்** (சர்வோதய வீதி, ஆவரங்கால் - புத்தூர்)

1990ஆம் ஆண்டு மண்டைதீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**முரளி** (பெனடிக் குணபாலா - மரப்பாலம், செங்கலடி - மட்டு)

**குணா** (காத்தமுத்து நாதன் - எழுவான்கரை வீதி, வந்தாறுமூலை - மட்டு)

**கபில்** (ராமலிங்கம் ரவி - பெரியபுல்லுமலை - மட்டு)

**ராஜேஸ்** (முத்துக்குமார் சோமநாதன் - கொடுவாமடு, செங்கலடி - மட்டு)

**சதீஸ்-றஜின்** (கணபதிப்பிள்ளை இரத்தினம் - முதலைக்குடா, முனைக்காடு - மட்டு)

**நிலக்சன்** (நாராயணபிள்ளை தயாளன் - கோயில் போரதீவு - மட்டு)

**பிரதீப்** (ஜோர்ஜ் வன்னியசிங்கம் - மூங்கிலடி வீதி, வந்தாறுமூலை - மட்டு)

**ரகுபரன்** (நாகப்பன் பேரின்பராசா - கித்துவெல, கரடியனாறு - மட்டு)

**ராம்கி** (நவரெட்ணராஜா உமாசங்கர் - கங்குவேலி, கிளிவெட்டி - மூதூர்)

**மகிந்தன்** (சின்னத்தம்பி அருட்பிரகாசம் - 1-ம் வட்டாரம், இருதயபுரம் - மூதூர்)

**சண்முகம்-அன்பு** (காந்தசிவம் அன்பரசன் - 20, சி. வி. வீதி, இருதயபுரம் - மூதூர்)

**றெஜினோல்ட்** (இளையதம்பி குணசேகரம் - கல்லடி, ஈச்சிலம்பத்தை - மூதூர்)

**ராஜிவ்** (கு நடராசா - திருமலை)

**லெப். இன்பன்** (கணபதிப்பிள்ளை குமரகுருபரன்- 2-ம் வட்டாரம், முள்ளியவளை - மணலாறு)

**லெப். ஜிம்கெலி** (கிருஷ்ணமூர்த்தி கிருஷ்ணகுமார் - ஒலுமடு - நெடுங்கேணி)

**ஜொனி** (பீற்றர் சிங்கம் - 29, செட்டிகுளம் - வவுனியா)

**உதயகுமார்** (குமாரசாமி மகேந்திரகுமார் - நெளுக்குளம் - வவுனியா)

**கேதீஸ்** (பாலகிருஷ்ணன் சந்திரகாந்தன் - சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி)

**சசி** (ஜெகநாதன் ஜெயசீலன், 3-ம் கட்டைச்சந்தி, முரசுமோட்டை - கிளிநொச்சி)

**வதனன்** (பொன்னுத்துரை இந்திரஜித் - 209, வட்டக்கச்சி - கிளிநொச்சி)

**பரணி** (ம. சந்திரராஜ் - மன்னார்)

வேலணை கிழக்கு)

**வேல்ராஜ்** (சிவராசா சுதாகிருஷ்ணா - கலட்டி - யாழ்)

**உதயவர்மன்** (நடராசா ஜெயானந்தம் - மல்லாகம் மத்தி - யாழ்)

**ரமேஸ்** (அட்சரலிங்கம் சந்தானலிங்கம் - கச்சாய் தெற்கு - கொடிகாமம்)

**சின்னப்பதாஸ்** (திசைவீரசிங்கம் லெட்சுமணாளன் - 10-ம் வட்டாரம் - புங்குடுதீவு)

**ஈஸ்வரன்** [பாலகிருஷ்ணன் ஈஸ்வரன் (அப்பன்) - புளியங்கூடல் ஊர்காவற்றுறை]

**எட்றிச்** [ஆசீர்வாதம் எஸ்ரீபன் அனுராஜா - 4-ம் வட்டாரம் - புங்குடுதீவு]

**மணியரசன்** [ஜோசப் ஈழநேசன் - நாரந்தனை - ஊர்காவற்றுறை]

**கங்கை** (அத்தனாஸ் அப்புலோனியஸ் - 10.ம் வட்டாரம் - புங்குடுதீவு)

**நிதர்சன்** [சின்னத்தம்பி சந்திரகுமார் - புலோலி தெற்கு - யா ]

**உஷா** (பசுபதி பாலசுந்தரம் - சங்கானை மேற்கு பண்டத்தரிப்பு - யாழ்)

**மகிந்தன்** (கார்த்திகேசு ஏகாம்பரம் - சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி - யாழ்)

**கோணேஸ்** ( - - - - )

**சக்கரவர்த்தி** ( - - - - )

காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**மயூரன்-அப்பன்** (சிவலிங்கம் மயூரன் - பிரதான வீதி, அளவெட்டி - யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் இலங்கை - இந்தியப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10170)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்... கிளை நூலகம்.

அத்தாட்சிப் பத்திரம் இல்லாத

## துப்பாக்கி வைத்திருப்போர் உடன் ஒப்படைக்க பணிப்பு

(கொழும்பு)

அத்தாட்சிபத்திரம்பெறாத பதிவுசெய்யப்படாத துப்பாக்கிகள் வைத்திருக்கும் அனைவரும் அவற்றை உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இத்தகைய துப்பாக்கிகளை பொலிசாரிடம் ஒப்படைப்பவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது. அத்தாட்சி பத்திரம் பெறாத பதிவு செய்யப்படாத துப்பாக்கிகளை மீட்குமாறும் அவற்றை ஒப்படைக்க தவறுபவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்குமாறும் பொலிசார் பணிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில்

## அவசரகால சட்டம் நீடிப்பிற்கு எதிர்ப்பில்லை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் தொடர்ந்தும் அவசரகாலச்சட்டம் அமுலில் இருப்பதை நாம் எதிர்க்கமாட்டோம் என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

தற்போது அமுலில் இருக்கும் அவசரகாலச்சட்டம் ஒரு மாதகாலமே அமுலில் இருக்கும் அடுத்த மாதம் அவசரகாலச்சட்டம் அமுல்படுத்தப்பட எம்மால் அனுமதிக்கப்படமாட்டாது. ஆனாலும் அது வடக்கு - கிழக்கில் தொடர்ந்து நீடிக்க நாம் இணக்கம் தெரிவிக்கின்றோம் எனவும் சந்திரிகா குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கில் அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டோர் போதிய சாட்சியங்கள் இருக்கும் பட்சத்தில் விசாரணையின் பின் விடுவிக்கப்படுவர் என்றும் அவர் குறிப்பிட்டார்

## அஷ்ரப் நடத்திய அரசியல் நாடகம்

### ராஜினாமா கடிதம் கொடுத்துவிட்டு அமைச்சர் பதவி ஏற்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் தனக்கு ஒதுக்கப்பட்ட அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதம் ஒன்றைப் பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்காகுமாரணதுங்கவிடம் ஒப்படைத்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் அமைச்சுப் பதவி ஒதுக்கீடு தொடர்பாக திருமதி சந்திரிகா மேற்கொண்ட கலந்துரையாடலின் போது ''எனக்கு அமைச்சுப் பதவி வேண்டாம்- பதவி இல்லாமலேயே என் சேவையை வழங்குகிறேன்'' என்று அஷ்ரப் தெரிவித்து இருந்தாராம்-எனினும் திருமதி சந்திரிகாவின் வற்புறுத்தலைத் தொடர்ந்து பதவியேற்றுக்கொண்ட அவர் வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு சேவையாற்றும் முகமாக புனர்வாழ்வு அமைச்சையும் பெற்றுக் கொண்டார்-

இருந்த போதிலும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும்இடையிலானஒப்பந்தம் அமுலாகும்வரைஅமைச்சராக இருப்பேன்- ஒப்பந்தம் மீறப்படும்போது எனது ராஜினாமா கடிதத்தில் நீங்கள் திகதியிட்டு அமுல் படுத்தலாம் எனவும் அஷ்ரப் திருமதி சந்திரிகாவிடம் தெரிவித்துள்ளார்-

கொழும்பு தாஜ் ஹோட்டலில் முக்கிய முஸ்லிம் பிரமுகர்களைச் சந்தித்தபோது இந்த விபரத்தை அமைச்சர் அஷ்ரப் வெளியிட்டார்-

# மட்டு. பல்கலை முகாமில் கைதான 158 பேரும் உயிருடன் இல்லை

(கொழும்பு)

1990 செப்டம்பர் 5 இல் மட்டக்களப்பு பல்கலைக்கழக அகதிமுகாமிலிருந்து இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்ட 158 தமிழரும் உயிருடன் இல்லை என அப்பிரச்சினை குறித்து விசாரணை செய்த மனித உரிமை குழு அறிவித்துள்ளது.

இக்குழுவின் அறிக்கை வருமாறு: 45 ஆயிரம் பேர் பார்த்திருக்க பல்கலைக்கழக அகதிமுகாமில் இக் கைது இடம்பெற்றது. வாழைச்சேனை தலைமைக்காரியாலய 8 ஆம் பிரிவைச் சேர்ந்த இராணுவமே இதற்குக் காரணம். பல ஜீப்புகளில் வந்த படையினர் தம்முடன் இரு பஸ்களையும் கொண்டுவந்தனர். அவர்கள் முகாமில் உள்ள பெணகளை ஒரு பக்கமாக நிறுத்தினர். ஆண்கள் மூன்று வரிசையில் நிறுத்தப்பட்டனர். முகமூடி மனிதர் தலையாட்ட கைதுகள் நடந்தன.

அகதிமுகாமில் 158 பேர் கைதாகினர். அவர்களின் குடும்பத்தவர் உறவினர் பார்த்திருக்க பின்புறமாக கைகள் கட்டப்பட்டன. 158 பேரும் பஸ்களில் ஏற்றப்பட்டனர். கைது செய்த படையினர் 158 பேரும் விசாரணையின் பின் விடப்படுவர் என கூறினர். இதை பார்த்துக்கொண்டிருந்த பல்கலைக்கழக அதிகாரிகள் கொண்டு செல்லப்பட்டவர்களின் விபரங்களை பட்டியலிட்டனர். பின்னர் நடந்த விசாரணைகளில் இதனுடன் சம்பந்தப்பட்ட படையினர் அடையாளம் காணப்பட்டனர். இது தொடர்பாக 1990 ஒக்டோபர் 17 இல் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு தகவல் அனுப்பப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறித்த நாளன்று வந்தாறுமூலையில் 32 பேர் மட்டுமே கைதானதாகவும் அவர்களும் ஒரு நாளில் விடுவிக்கப்பட்டதாகவும் கூறினார். அடையாளம் காட்டப்பட்ட படையினர் மீதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் கைதான 158 பேரில் எவரும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால் அவர்களுக்கு மரண அத்தாட்சி வழங்குமாறு மனித உரிமைக் குழு குறிப்பிட்டுள்ளது.

தேசிய தொழில் பயிலுநர்

## கொடுப்பனவு பெறாத உரிமையாளர்க்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய தொழில் பயிலுநர் அதிகார சபையால் நடத்தப்பட்ட பயிற்சி நெறிகளில் பயிலுநருக்கான 450 ரூபா கொடுப்பனவினை 1991இலிருந்து இதுவரை பெறாத நிறுவனங்களைச் சேர்ந்த உரிமையாளர்கள் எதிர்வரும் 29-ம் திகதி காலை 9 மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்து தங்கள் பிரச்சினைகளை அறியத்தருமாறு வடக்கு கிழக்கு மாகாண பயிற்சி முகாமையாளர் கேட்டுள்ளார்.

மேலும் யாழ். மாவட்டத்தில் கூடுதலான பயிலுநர்கள் சேர்க்கப்படவுள்ளதால் பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த உரிமையாளர்களை தவறாது இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்-

கொழும்பு துறைமுகத்தில்

## வேலைகள் ஸ்தம்பிதத்தால் கப்பல் சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு துறைமுக வேலைகள் சிறிது காலம் ஸ்தம்பிதம் அடைந்ததினால் வடபகுதிக்கான சப்பல் சேவையில் கால தாமதம் ஏற்பட்டு மேலதிக கட்டணம் செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளது என யாழ். அரச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் சிறிலங்கா அரசியலில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து சிறிது காலம் அரச நிர்வாகத்தில் உள்ள உயர் அதிகாரிகள் தமது கடமைகளிற்கு திரும்புவதற்கு பின்நின்றனர். இதனால் கொழும்பு துறைமுக வேலைகள் தாமதமாக வேண்டிய நிலை ஏற்பட்டது இதைத் தொடர்ந்து வடபகுதிக்கான அத்தியாவசிய உணவுப் பண்டங்களை ஏற்றி வரும் கப்பல்களும் தாமதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் கப்பல்களின் வழக்கமான கட்டணத்தை விட மேலதிகமாக தாமதக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளதாக மேலும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (88)

## செஞ்சிலுவை சங்க மருத்துவ சேவை

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளையினரால் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் உற்சவத்தை முன்னிட்டு கோவில் வீதியில் நடத்தப்பட்டுவரும் இலவச மருத்துவ சேவைப் பிரிவில் தினசரி ஆலயத்திற்கு வரும் ஐம்பதுக்கும் மேற்பட்ட மக்கள் பகல், இரவில் வைத்திய சிகிச்சை பெற்று வருகிறார்கள்

இச்சங்கத்தின் இலவச வைத்திய சேவை இன்றைய கலகட்டத்தில் மக்களுக்கு ஒரு நல்ல வரப்பிரசாதமாக இருக்கிறது

இங்கு உடன் காயம், புண்களுக்கும் மருந்து கட்டி வைத்திய சேவை சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

அத்துடன் இங்கு சங்க அம்புலன்ஸ் வண்டி ஒன்றும் இலவச சேவையை நடாத்தி வருகிறது (24)

## ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கப்படும் என்பது உறுதி

### - சி. வி. குணரத்தினா

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கப்பட வேண்டும் என்பதில் பொது ஜன ஐக்கிய முன்னணி உறுதியாக இருக்கின்றது. இவ்வாறு கைத்தொழில்கள் துறை அமைச்சர் சி.வி. குணரத்தினா கூறியுள்ளார் ஐலண்ட். பத்திரிகைக்கு கருத்துதெரிவித்தஅவர்மேலும் கூறுகையில் இதில்மீளாய்வு செய்யப்படுவதற்கே இடமில்லை எனவும் தெரிவித்தார்.

இதே வேளை நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி மாற்றப்படுவதற்கு ஐ. தே. க. உறுப்பினர்கள் சிலரும் ஆதரவளிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## புதிய ஒழுங்கு கோவை

(கொழும்பு)

தேசிய தொழிலாளர் ஒழுங்கு கோவை யொன்றை அமைக்கப் போவதாகவும் இதற்கான ஓர்சபைஅமைக்கப்படுவதாக தொழில், தொழில் சார்பயிற்சி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்-

நேற்று முன்தினம் தனது புதிய அமைச்சு பதவிகளை ஏற்க சென்றபோது மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார்-

## பிரியாவிடை

வங்கியாளர் சங்கத்தின் தலைவர் திரு க. கணேசமூர்த்தி அவர்களுக்கு பிரியாவிடை வைபவமும் சங்கத்தின் பரிசளிப்பு விழாவும் வரும் 27 ஆந் திகதி 9மணியளவில்யாழ்ப்பாணகல்லூரிவெளிவாரி பட்டதாரிப் பிரிவில் (இலங்கை வர்த்தக வங்கிக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம் வங்கியாளர் சங்கத்தினரால் நடாத்தப்படவுள்ளது.

## ஜீவாகாரம் விநியோகம்

(கொழும்புத்துறை)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்களுக்கு இலவசமாக ஜீவாகாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

அளவெட்டி-மல்லாகம் பகுதிகளில் வாழும் சுமார் முந்நூறுக்கும் மேற்பட்ட சர்ப்பிணித்தாய் மார்களுக்கு ''ஜீவாகாரம்'' வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது (24)

## விசர் நோய்த் தடுப்பூசி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர சபைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கைகளை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும், பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து மேற்கொண்டுள்ளன. பருத்தித்துறை நகர சபை அலுவலகம், நெல்லண்டை கிழக்கு சனசமூக நிலையம், சென். தோமஸ் சனசமூக நிலையம், சென். அலரனீஸ் சனசமூக நிலையம் பெரியதம்பிரான் ஆலய அருகாமை, கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம், தம்பசிட்டி முருகையன் கோவில் அருகாமை ஆகிய இடங்களில் வைத்து இவ் வளர்ப்பு நாய்களுக்கான விசர் நாய்த் தடுப்புஊசிகள் போடப்படும் என்றும் மேலதிகவிபரங்களை பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்திலும் பருத்தித்துறை நகர சபை அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## நிவாரணம் பெறுவதில் மோசடி தடுக்கப்படும்

### ஏ. எச். எம். பௌஸி

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களின் போது பாதிக்கப்படாதவர்கள் மோசடியான முறையில் உதவிப்பணம் பெறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சுகாதார சமூக சேவைகள் அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச். எம் பௌஸி தெரிவித்துள்ளார்.

காட்டி மோசடியான முறையில் பாதிக்கப்படாதவர்கள் பணஉதவி பெறும் போது பொதுநிதி விரயமாகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்

வலது குறைந்தோர், போதைக்கு அடிமையானோர்

# விருப்பு வாக்குகளில் மோசடி ஐ.தே.க. வேட்பாளர்கள் புகார்

''எனக்கு அமைச்சுப் பதவி வேண்டாம்- பதவி இல்லாமலேயே என் சேவையை வழங்குகிறேன்'' என்று அஷ்ரப் தெரிவித்து இருந்தாராம்-எனினும் திருமதி சந்திரிகாவின் ளார்-

கொழும்பு தாஜ் ஹோட்டலில் முக்கிய முஸ்லிம் பிரமுகர்களைச் சந்தித்தபோது இந்த விபரத்தை அமைச்சர் அஷ்ரப் வெளியிட்டார்-

## ஐ·ஐ·தே·மு ஆதரவாளரில் 90வீதம்என்னை ஆதரித்தது

[கொழும்பு]

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் 90 சதவீத ஆதரவாளர்கள் எனக்கு வாக்களித்தனர் என போக்குவரத்து நெடுஞ்சாலைகள் சூழல் பாதுகாப்பு அமைச்சர் சிறிமானி அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி லலித் பிரிவு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் இடம்பெற்றாலும் அது சுயேட்சையாகவே இயங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

## கொழும்பு பத்திரிகைகளில் பொ.மு. விற்கு முதலிடம்

(கொழும்பு)

இதுவரை காலமும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த கொழும்பு நாளிதழ்கள், தேர்தலின் பின்னர், பொதுஜன ஐக்கிய முன்னணிக்குச், சார்பான செய்திகளுக்கு முக்கிய இடம் அளித்து வருகின்றன.

லேக்ஹவுஸ் பத்திரிகைகள் தமது தலைப்புச் செய்திகளைக் கூட நீல வண்ணத்தில் வெளியிட்டுள்ளன. பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவின் ஆரம்பகால புகைப்படங்களை தொடர்ந்து இவை பிரசுரித்து வருகின்றன.

## ஐ.தே.கவிற்கு எதிராக மக்கள் வாக்களித்துள்ளனர்

- தினேஷ் குணவர்த்தனா

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கே ஐ.தே. கவை தோற்கடிக்கும் சக்தி உண்டு. இதையே தேர்தல் முடிவுகள் மூலம் மக்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா கூறியுள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி தோற்கடிக்கப்பட்டது பற்றிக் குறிப்பிடுகையில், ஐ. தே கவை தோல்வியுறச் செய்ய வேண்டும் என்பதே தமது கட்சியின் கோரிக்கையாக இருந்தது மக்கள் அதற்கேற்பவே வாக்களித்துள்ளனர் ஐ தே.கவின் சில கொள்கைகளை மக்கள் ஐக்கிய முன்னணி எதிர்த்தது. ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி ஐ தே.கவையே நிராகரிக்கும்படி கோரியது. மக்கள் ஐ தே.க விற்கு எதிராகவே வாக்களித்துள்ளனர். அதனை நாம் ஏற்றுக்கொள்ளவே வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## பரிசோதனை

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி லியோ கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இலவச வைத்திய பரிசோதனை நல்லூர் மேற்கு வீதியில் உள்ள மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் வைத்தியர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# விருப்பு வாக்குகளில் மோசடி ஐ.தே.க. வேட்பாளர்கள் புகார்

(கொழும்பு)

தோல்வியுற்ற ஐ தே. க. வேட்பாளர்களில் பலர் விருப்பத் தெரிவு வாக்கு எண்ணப்படுவதில்முறைகேடுகள் தமது கட்சிக் சகாக்களால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகப் புகார் கூறியுள்ளனர். குறிப்பாக கொழும்பு, கம்பஹா, கண்டி மாவட்டங்களைச் சேர்ந்த ஐ தே. க வேட்பாளர்கள் இவ்வாறு புகார் கூறியுள்ளனர்.

விருப்பு வாக்குகள் எண்ணப்படுவது ஊழியர்களின் களைப்பு காரணமாக ஒரு நாள் ஒத்தி வைப்பதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்ததையும் அவர்களில் சிலர் பொருட்படுத்தவில்லையாம். கம்பகா மாவட்டத்தில் ஐ தே. க வேட்பாளர் ஒருவர் விருப்பு வாக்கு எண்ணப்படுவதில் மோசடி செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட செயலாளரிடம் எழுத்து மூலம் புகார் செய்துள்ளார்.

மேலும் பல வேட்பாளர்கள் இது தொடர்பாக நீதிமன்றம் செல்வதற்காக கட்சியின் அனுமதியைக் கோரியிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. கண்டி மாவட்டத்தில் விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் போது திடீரென மாற்றம் ஏற்பட்டதாக வேட்பாளர்கள் பலர் புகார் கூறியுள்ளனர். ஆறுமணி நேரத்தில் குறிப்பிட்ட ஒரு வேட்பாளர் ஆக அடிநிலையில் இருந்து திடீரென முன்னணிக்கு கொண்டு வரப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த சிறிசாந்த லால்குமாரசிங்க விருப்பு வாக்கு எண்ணப்படுவதில் மோசடி இடம் பெற்றுள்ளது எனப் பகிரங்கமாகவே குற்றம் சுமத்தியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சபாநாயகர் பதவிபற்றி எதுவும் பேசப்படவில்லை

- மு. சிவசிதம்பரம்

(கொழும்பு)

சபாநாயகர் பதவி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தரப்படுவது பற்றி பொது மக்கள் ஐக்கிய முன்னணி எந்தச் சந்தர்ப்பத்திலும் பேச்சு நடத்தவில்லை இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு. சிவசிதம்பரம் கூறியுள்ளார்.

அத்துடன் தமிழர் பிரச்சினைக்கான பொருத்தமான நியாயமான தீர்வு ஒன்றை முன் வைக்கும் பட்சத்திலேயே பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவு நல்கும் எனவும் தெரிவித்தார். அது வரையும் தனித்துவமான எதிர்க்கட்சியாகவே இயங்கும் எனவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும் கூறுகையில், தேசிய பட்டியல் மூலமான பிரதிநிதி யார் என்பதை தெரிவு செய்வதற்காக கட்சியின் அரசியல் குழு விரைவில் கூடும் எனவும் குறிப்பிட்டார்.

## வெட்டுக் காயம்

தலையிலும் கையிலும் பலத்த வெட்டுக் காயத்துடன் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட யுவதி ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தின்போது வெட்டுக்காயத்திற்கு இலக்கானவர் வசந்தா என்பவராவார். கடந்த திங்கள் வீட்டில் தனியாக இருந்தபோது இச்சம்பவம் நடைபெற்றதாகவும் அதனால் மேற்கொண்டு விவரம் எதுவும் தெரியாதெனவும் இவரது தாயார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காயத்திற்கு இலக்கானவரின் உடல்நிலை மோசமாகவே உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

புதிய அமைச்சரிடம்

## தனது பொறுப்புக்களை அனுரா ஒப்படைத்தார்

(கொழும்பு)

முன்னாள் ஐ. தே. க. அரசாங்கத்தின்உயர்கல்விஅமைச்சர் அனுரா பண்டாரநாயகா தனது அமைச்சுப் பொறுப்புக்களைநேற்று முன்தினம்பல் கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் முன் வைத்து புதிய அமைச்சர் ரிச்சர்ட் பத்திராவுக்கு ஒப்படைத்து விடைபெற்றார்.

தனது தந்தை எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா ஜனநாயகத்திற்கு உச்ச நிலையில் மதிப்பளித்தவர் என்றும் தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தான் எதிர்காலத்தில் முன்னேறிச் செல்லப் போவதாகவும் எனவே ஜனநாயகத்தின் மரபான மக்கள் தீர்ப்புக்கு தாம் தலை வணங்குவதாகவும் அனுரா அங்கு தெரிவித்தார். இதேவேளை தனது தாயார், சகோதரி சந்திரிகா ஆகியோர் தொடர்பாக அவர் எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

கள் மோசடியான முறையில் உதவிப்பணம் பெறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சுகாதார சமூக சேவைகள் அமைச்சர் அல்ஹாஜ்ஏ.எச். எம் பௌஸி தெரிவித்துள்ளார்.

வெள்ளம், புயல் மற்றும் அனர்த்தங்களின் போது போலி ஆவணங்களைக் ... பொதுநிதி விரயமாகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்

வலது குறைந்தோர், போதைக்குஅடிமையானோர் தொடர்பாகவும் அமைச்சு நடவடிக்கை எடுக்குமென வும் அவர் தெரிவித்துள்ளார்

முன்னாள் அமைச்சர்களின்

## மோசடி நிரூபிக்கப்படின் குடியியல் உரிமை பறிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான மோசடிக் குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில், அவர்கள் குடியியல் உரிமையை இழக்க நேரிடும் என கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

ஒழுங்கீனம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கவிருக்கும், ஆணைக்குழுவிடம், பாராளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் தங்கள் சொத்துக்கள் பற்றிய விபரங்களை வெளியிட வேண்டுமென்றும், வர்த்தகத் தொடர்புள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கால அவகாசம் அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயிற்சியாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

தேசிய தொழிற்பயிற்சி சபையின் பயிற்சியாளர்களாக கல்வித்திணைக்களத்தில் பத்துப் பேரும் கச்சேரியில் ஐம்பது பேரும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்

இதற்காக யாழ் கச்சேரிக்கு நூற்று எழுபது பேர் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிய வருகிறது (88)

## போர்க்கால கருத்தரங்கு

(வடமராட்சி)

வடமராட்சி கோட்டத்தில் வட்டரீதியாக போர்க்கால கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. உடுப்பிட்டி, கரவெட்டி, பருத்தித்துறை வட்டத்தில் தினமும் கிராம ரீதியாக இக் கருத்தரங்குகள் நடைபெற்றுவருகின்றன. பருத்தித்துறை வட்டத்தில் அரசியல்துறை பொறுப்பாளர் திரு.கண்ணதாசன் போர்க்கால கருத்துரைகளை மக்களுக்கு வழங்கி வருகிறார். (யோ)

## வடமராட்சியில் குளம் திருத்தம்

வடமராட்சி பகுதியில் கரவெட்டி அந்தணன்திடலிலிருந்துசலனேரிவரையான கண்ட வாய்க்கால் ஊரிக்காடு தெற்கில் உள்ள வயற்குளம் ஆகியன தேச நிர்மாணிகளால் திருத்தம் செய்யப்பட்டு வருகிறது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம்இவ்வருடத்திற்கான நீர்வளம் தொடர்பாக திரட்டிய தகவல்கள் மற்றும் ஆய்வுகளின் அடிப்படையில் உருவாக்கிய துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் இத் திருத்த வேலைகளினால் பல விவசாயிகள் நன்மையடையவுள்ளனர்.

# அமைச்சரவையில் இருந்த 21 பேர் தோல்வியுற்றனர்

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் அமைச்சர்கள், திட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் எனப் பதவி வகித்த பத்தொன்பது ஐ.தே கவினர் தோல்வியுற்றனர்.

காணி அமைச்சர் போல் பெரேரா, பாராளுமன்ற விவகார அமைச்சரும், திட்ட அமுலாக்கல் அமைச்சருமான விமல் விக்கிரமசிங்க, கைத்தறி புடவைக் கைத்தொழில் அமைச்சர் யூ பி. விஜயக்கோன் தொழில் தொழில்பயிற்சி அமைச்சர் எம்.எல்.எம். அபுசாலி, வர்த்தக வாணிப அமைச்சர்ஏ ஆர் எம் மன்சூர் ஆகியோர் தோல்வியுற்றனர்.

மேலும் சுற்றாடல் அமைச்சர் பி.எம்.பீ. சிறில், விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் தேமிய ஹருள்ளே, மனிதவள ஒருங்கிணைப்பு அமைச்சர் தயானந்த விக்கிரமசிங்க, கல்வி சேவைகள் அமைச்சர் சுனேத்ர ரணசிங்க, கைத்தறி நெசவு அமைச்சர் அப்துல்மஜீத் ஆகியோர் தோல்வியடைந்த திட்ட அமைச்சர்கள் ஆவார்.

கலாசார ஒருங்கிணைப்பு இராஜாங்க அமைச்சர் கவிரத்னா, சட்ட சிறைச்சாலைகள் சீர்திருத்த இராஜாங்க அமைச்சர் மகேன்குணசேகர, விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் விஜேரத்ன பண்டா, புனர்வாழ்வு புனரமைப்பு இராஜாங்க அமைச்சர் சமந்தா கருணாரத்னா, நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் சரத் வெலகெதர, புடவைக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் குணதிலக்கா, கனிப்பொருள் சார்ந்த கைத்தொழில் அமைச்சர் வன்னிநாயக்க மின்சக்தி எரிபொருள் இராஜாங்க அமைச்சர் மேர்வின் ஜே. குரே, பாராளுமன்ற அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திஸ்ஸகுட்டி ஆராய்ச்சி, விளையாட்டு இராஜாங்க அமைச்சர் டி எம். ஆரியதாச புத்தசாசன இராஜாங்க அமைச்சர் லால் கமகே, சிறு ஏற்றுமதி பயிர் அபிவிருத்தி அமைச்சர் சேனராஜ சமரநாயக்க, இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் பீ பீ. தேவராஜ் ஆகியோர் தோல்வியுற்ற இராஜாங்க அமைச்சர்களாவர்.

## 10- வது பாராளுமன்றத்தில் 11 பெண் உறுப்பினர்கள்

(கொழும்பு)

பத்தாவது பாராளுமன்றத்தில் மொத்த உறுப்பினர்களில், பதினொரு பெண்களும் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பிரதமர் உட்பட எட்டுப் பேர் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்கள்.

சந்திரிகா குமாரணதுங்கா, சுமித்திரா பிரியாங்கனி அபேவீர. ஹேமா ரட்ணாயக, சுமேதா ஜெயசேன, சிறிமனி அத்துலத் முதலி, நிருபமா ராஜபக்ச, பவித்திரா தவி வன்னியாராச்சி, சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோர் பொ. ஐ, முன்னணியிலிருந்தும்,

ரேணுகாஹேரத், ராஜமனோகரி புலேந்திரன் அமரா பியசீலி ரத்னாயக்கா ஆகியோர் ஐ. தே. கவிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## இ. தொ. காவை அணைக்க அரசாங்கம் முயற்சி

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரசையும் இணைத்து அணைத்துச் செல்வதற்கான முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு தமிழ் இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, இ. தொ. கா. உயர்மட்டத்துடன் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும், இவ்வாறான நிலை தோன்றினால் ஐக்கிய தேசிய கட்சி இதனை எவ்வாறு அணுகும் என சரிவரக் கூற முடியாதுள்ளதாகவும் அவ் இதழ் மேலும் தெரிவித்துள்ளது.

இ தொ. கா. புதிய அரசுடன் இணையுமாயின் இனப் பிரச்சினை உட்பட சிறுபான்மையினர் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வை ஏற்படுத்தக் கூடிய சாதகமான சூழ்நிலை உருவாகலாம் எனவும் அவ்விதழ் தெரிவித்துள்ளது.

## கிருஷ்ண ஜயந்தி

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி (கண்ணன் பிறப்பு) விழா எதிர்வரும் 29 ம் திகதி திங்கட்கிழமை நடைபெறுகின்றது. அன்றைய தினம் நள்ளிரவு 12 மணிக்கு கண்ணன் தரிசனமும் பின்னிரவு உறியடி உற்சவமும் நடைபெறுமென ஆலய தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது. (25)

## விகிதாசார தேர்தல் முறை மு. காங்கிரஸ் எதிர்க்கும்

### எம், எச். எம் அஷ்ரப்

(கொழும்பு)

விகிதாசார தேர்தல் முறையிலுள்ள பாதகங்களை நீக்குவதற்கான போராட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீவிரமாக ஈடுபடும் என அதன் தலைவரும், அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் கூறியுள்ளார்.

தற்போதைய தேர்தல் முறையினால் பல ஆசனங்களை நாம் இழக்க நேரிட்டது இந்தப் பாதகமான நிலையை நீக்க நாம் முயற்சிகளை மேற்கொள்வோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ம.மா.சபை 8 உறுப்பினர் பாராளுமன்றிற்கு தெரிவு

(கொழுப்பு)

மத்திய மாகாண சபை உறுப்பினர்களாயிருந்த 15 பேர், பொதுத்தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிட்டனர். இவர்களில் 8 பேர்பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர்

பொதுஜன ஐக்கியமுன்னணி சார்பில் நால்வரும், ஐதேக சார்பில் ஒருவரும், இதொகா சார்பில் இருவரும், மலையக மக்கள் முன்னணி சார்பில் ஒருவரும், மத்திய மாகாண சபையிலிருந்து பாராளுமன்றம் சென்றுள்ளனர்.

## நிவாரணம் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய யூலை மாத முதல் இரண்டு வார நிவாரண உலர் உணவுப் பொருள்கள் 23-ம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் சங்க நிவாரணக் கிளைகளில் விநியோகிக்கப்படுகின்றன. (22)

## உணவு முத்திரை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தோருக்கான நடப்பு வருட ஆனி, ஆடி, ஆவணி மாதங்களுக்கான புதிய நிவாரண உணவு முத்திரைகள் தற்போது விநியோகிக்கப்படுகின்றன. 16ஏ, 16பி, 17ஏ, 17பி, 18ஏ. 18பி ஆகிய ஆறுபுள்ளிகளையும் உள்ளடக்கியஇப்புதிய முத்திரைகள் அந்தந்தப் பகுதி பிரதேச செயலர் பிரிவுகளின் மூலம் கிராம சேவை அலுவலர்களினால் வழங்கப்படுகின்றன. (22)

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். புகையிரத நிலைய முகாம் (ஸ்டீபன் குடியிருப்பு) வாழ் தீவக மக்களின் வருடாந்த 'இல்ல விளையாட்டுப் போட்டி' இம்மாதம் 26ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் குடியிருப்பு மைதானத்தில் நடைபெறும். நீலம், சிவப்பு ஆகிய இரு இல்லங்களைக்

## உத்தியோகபூர்வ வீடுகள் வாகனம் மீளளிக்க பணிப்பு

(கொழும்பு)

உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களையும், உத்தியோகபூர்வ வாகனங்களையும் உடனடியாக கையளிக்கும்படி முன்னாள் அமைச்சர்களுக்கு புதிய அரசு பணிப்புரை விடுத்துள்ளது.

இதேவேளை ஐ. தே. க. தரப்பு அரசியல்வாதிகளில் பலர் அரசவாகனங்களையும்கூட்டுத்தாபன வாகனங்களையும் தேர்தல் வேலைகளுக்காகப் பயன்படுத்தியதாகவும் கூறப்படும் முறைப்பாடுகள் பல புதிய அரசுக்கு கிடைத்துள்ளன.

மேலும் விபத்தில் சிக்கி திருத்தத்திற்கு உட்பட்டுள்ளது எனக் கூறப்பட்ட பல அரச வாகனங்களில், காணப்பட்ட அரசாங்க முத்திரைகள் அழிக்கப்பட்டும், இலக்கத்தகடுகள் மாற்றப்பட்டும் இருப்பது புலனாய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் கீழிருந்த வாகனங்களில் இருபது வரை தேர்தல் வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

## மென் பந்து போட்டியில் சாம்பியனாகியது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்திய மென் பந்து (கிறிக்கெட்) சுற்றுப் போட்டியில் தும்பளை கருணா நிதிவிளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி 1994 ம் ஆண்டிற்கான சாம்பியன் சுழல் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது. இம் மென்பந்து சுற்றுப் போட்டியில் வடமராட்சியைச் சேர்ந்த 12 விளையாட்டுக்கழகங்கள்பங்கு பற்றின. (25)


## "பாமசிஸ்ட் தேவை"

பாமசிஸ்ரும், விற்பனையாளரும் உடன் தேவை உங்கள் விண்ணப்பங்களை 30 - 8 - 94 க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

"யாழ் மருந்தகம்"
வெஸ்கோ
470 [250] நேணல் கிட்டு சாலை
யாழ்ப்பாணம் (O. P. D முன்பாக)
(9189)



உ
அம்பாள் துணை

## கம்பவாருதி அவர்களை


வரவேற்று வாழ்த்துகிறோம்.

ஆளைப் போல் நெஞ்சும் அகலித்துக் கம்பனது
தாளைப் பணிவதுவே தன்வேலை என்று எழுந்து
நல்லபணிகளுக்கு நாயகனாய்ச் சேவகனாய்
சொல்லும் படிவந்து சுடர்கின்ற ஓர் பிறவி.
பார்த்தாற் சிரிப்பும் பழகி விட்டாற் பாசமதும்
வார்த்தைகளைக் கேட்டால் வணங்குகின்ற
தேவையதும் தோன்றும்.

### ஜெயராஜ் அவர்கள்

வடமராட்சி - வதிரி உல்லியனெல்லை
அம்பாள் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு
இன்று தொடக்கம் தொடர்ந்து பதினைந்து
தினங்கள் வரை தினமும் மாலை 7 மணி-8மணிவரை
மகாபாரத தொடர் விரிவுரை
நிகழ்த்த விருக்கிறார். அவர் வடமராட்சியில்
முதன் முதல் நிகழ்த்துகின்ற மகாபாரத விரிவுரை


## 4-ம் ஆண்டுநினைவலைகள்



அன்ரன் அசில்லாஸ் (மோகன்)
4-ம் வட்டாரம் -மண்டைதீவு

மண்ணில்: 25 - 11 - 1962
விண்ணில்: 25 - 08 - 1990

பாரெல்லாம் பரிதவிக்க பறந்தோடிப்
போனதேனோ
எம்மை எல்லாம் தவிக்க வைத்து மாயமாய்
மறைந்ததேனோ

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழீழ அரும்பராய்:
15
–
02

4-ம் வட்டாரம் -மண்டைதீவு

**மண்ணில்:** 25 - 11 - 1962 **விண்ணில்:** 25 - 08 - 1990

பாரெல்லாம் பரிதவிக்க பறந்தோடிப்
போனதேனோ
எம்மை எல்லாம் தவிக்க வைத்து மாயமாய்
மறைந்ததேனோ
ஆண்டு நான்கு சென்றாலும் உன்
நினைவு எம் நெஞ்சங்களை விட்டகலாது

உம்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்.

4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (9195)

---

## வீட்டுக் கிருத்தியமும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு
26.04.1975

வீரச்சாவு
13.07.1994

### வீரவேங்கை கௌதமி
### (கந்தசாமி சாந்தி)

நீங்காத நினைவலைகள் நெஞ்சை முத்தமிட
தூங்காத எம் விழிகள் தாம் கரைந்து அழுகின்றன
நீங்கள் துயில் கொண்டு நிறைந்தது 45 நாட்கள்
நாங்கள் துயில் கொண்டு நமதாவி போகும் வரை
தூங்காது உங்கள் நினைவு
துடித்திருக்கும் எங்கள் இதயம் போல.

எமது புதல்வியின் இல்லத்தில் நாளை (26-08-94) வெள்ளி அன்று நடைபெறும் 45-ம் நாள் இதய அஞ்சலிவைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

அப்பா, அம்மா,
அத்தான்மார், அக்காமார்,
அண்ணா, தங்கை.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
(9182)

---



தமிழீழ அரும்பாய்:
15 – 02 – 1962

தமிழ் மக்கள் விழுதாய்:
25 – 08 – 1990

### வீரவேங்கை நடிகன்/ராஜீவ்காந்தி
### (நடராசா திருஞானமூர்த்தி)

பாரதத்துப் படையுடனே பல இடத்தில் எதிர்த்து
நின்றாய்.
பயங்கரப் போர்கள் தொடுத்துப் பல இடத்தில்
வெற்றிகண்டாய்
வன்னியிலே உன் படையை வழி நடத்தும் பொறுப்
பேற்றாய்
அன்னியரை அழிப்பதற்கு ஆர்வத்துடன்
செயற்பட்டாய்
வஞ்சகர்கள் கூட்டத்திற்கு வகைவகையாய் அடி
கொடுத்தாய்
நாளை வரும் தமிழருக்கு நல்லதொரு வழி
சமைத்தாய்.
பலருடைய பாராட்டில் பாசத்தோடு பழகி வந்தாய்
தமிழ் மக்கள் கண்ணீரை நேசத்துடன் துடைத்து
நின்றாய்.
தமிழ் ஈழ தேசத்திலே நேசமில்லா பலபேரை எதிர்த்து
நின்றாய்
ஈழத்தின் விடுதலைக்கு உன்னையே அர்ப்பணிக்கத்
துணிந்து நின்றாய்
வடமராட்சி கிழக்கு தனை வந்தவுடன் பொறுப்
பேற்றாய்
மருதங்கேணி மண்தனிலே மைந்தனாக நீ பிறந்தாய்
மண்டைதீவில் சண்டையிட்டு மாவீரனாகி விட்டாய்

இவருடன் வீரச்சாவை தழுவிய 38 வீரவேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

இவரது பிரிவில் வாடும்
தாய், சகோதரங்கள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

மருதங்கேணி வடக்கு,
தாளையடி,
(9170)

---

யாழ். புகையிரத நிலைய முகாம் (ஸ்டீபன் குடியிருப்பு) வாழ் தீவக மக்களின் வருடாந்த 'இல்ல விளையாட்டுப் போட்டி' இம்மாதம் 26ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் குடியிருப்பு மைதானத்தில் நடைபெறும். நீலம், சிவப்பு ஆகிய இரு இல்லங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகளுக்கிடையே நடைபெறவுள்ள போட்டிகளுக்கான பரிசளிப்பு இறுதி நாளான 28ஆம் திகதி [ஞாயிற்றுக்கிழமை] நடைபெறும். [22]

## பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை விக்னா பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா பாலர் பாடசாலை பெற்றோர் சங்கத் தலைவர் திரு இ. புலேந்திரன் தலைமையில் இன்று நடைபெறுகின்றது. தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு வடமராட்சி உதவிப் பொறுப்பாளர் திரு. தயாவும், மங்கள விளக்கை சுவாமி சித்ரூபானந்தாவும் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைக்கின்றனர். யாழ்ப்பாணம் கிளிநொச்சிப் பிரதேசங்களின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா பிரதம விருந்தினராவும், பருத்தித்துறை பிரதேச செயலர் திரு ஆ. சிவசுவாமி விசேட விருந்தினராகவும், பருத்தித்துறை நகராளுமன்றச் செயலாளர் திரு. க. சண்முகநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (25)

## மீண்டும் இ. போ. ச

(கொழும்பு)

மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவை என்பது நீக்கப்பட்டு சகல பஸ் வண்டிகளிலும் இ.போ ச. என தற்போது எழுதப்பட்டு வருகிறது. இதே போல் சிங்களத்தில் லங்கம என்றும், ஆங்கிலத்தில் சி.ரி.பி என்றும் எழுதப்பட்டு வருகின்றன.

---


அம்பாள் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு இன்று தொடக்கம் தொடர்ந்து பதினைந்து தினங்கள் வரை தினமும் மாலை 7 மணி-8 மணிவரை **மகாபாரத** தொடர் விரிவுரை நிகழ்த்த விருக்கிறார். அவர் வடமராட்சியில் முதன் முதல் நிகழ்த்துகின்ற மகாபாரத விரிவுரை என்றவகையில் அவரை நாங்கள் வாழ்த்தி வரவேற்கிறோம்.

-வடமராட்சி இயல்துறை ஆர்வலர்கள்.

(9164)

---

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து (25-8-94)



### சி. லவர்ணன் -- சி. சாத்வீகன்

சாவகச்சேரியைச் சேர்ந்த சிவநாதன்-புனிதவதி தம்பதிகளின் செல்வப்புதல்வர்கள் லவர்ணன்-சாத்வீகன் 25-8-94 இன்று தங்களது பிறந்த நாளை ஓமானில் கொண்டாடுகிறார்கள். அவர்களை உற்றார், உறவினர்கள் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
பொ. நவநீதன்
ஆசையப்பா

1-ம் ஒழுங்கை
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
(9191)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

**சிந்தனைக்கு..**

எதிரிக்காக நெருப்பு மூட்டும்போது கவனமாயிருக்க வேண்டும். ஏனெனில் அது உன்னையும் சுடும்.

- சீனப்பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 25 08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் 05

## கடமையை மறுக்கும் ஜனாதிபதி டி.பி.

பொதுத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியால்ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா துவண்டு போய்விட்டார் போன்றே உள்ளது. ஏனெனில், தேர்தலின் முன்னர் அவர் பேசிய வீரவசனங்களோ அன்றி அதிகார தோரணையோ இன்று அவர் பேச்சில் இருப்பதாக இல்லை ஏன் இன்று அவர் பேசுவதே இல்லை எனலாம்.

யார் தேர்தலில் வென்றால் என்ன? யார் தோற்றால் என்ன? நானே முப்படைகளுக்கும், பொலிஸ் படைக்கும் பொறுப்பானவன்- எனது அனுமதியின் பெயரிலேயே சட்டங்கள் உருவாக முடியும். இவ்வாறெல்லாம் அதிகாரத் தோரணையில் பேசிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவே இன்று வெளிப்படையாகப் பேசுவதையே நிறுத்திக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இவ்வாறு அடங்கிப் போனதை சந்திரிகா குமாரணதுங்காவின் அமைச்சரவை பதவி ஏற்ற உடனேயே அவதானிக்க முடிந்தது. இதனை, புதிய அமைச்சரவையுடன் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா எடுத்துக் கொண்ட புகைப்படத்தைப் பார்ப்பவர்களே புரிந்து கொள்ள முடியும். அப்படத்தில் புதிய பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவும், சிறிமாவோ பண்டாரநாயக்காவும் நிமிர்ந்து இருக்க, இடையில் டி. பி. விஜேதுங்கா கூனிக்குறுகிப்போய் இருப்பதே இதனைக் காட்டுவதாய் உள்ளது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் இன்றைய இந்நிலை குறித்து கொழும்பில் பல்கலைக்கழக அரசியல் துறைப் பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட, 'ஜனாதிபதி விஜேதுங்கா தற்பொழுது தனது முழு அதிகாரத்தையும் பிரயோகிக்க முடியாத ஒரு முடமான வாத்து' எனக் குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் பொருத்தப்பாடான கூற்று என்றே எண்ண வைக்கின்றது.

ஆனால் எது எவ்வாறு இருப்பினும் ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா அரசியலமைப்பு ரீதியாக நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகள் பல உள்ளன. இந்தவகையில் புதிய அரசாங்கத்தின் புதிய பாராளுமன்றக் கூட்டத் தொடரை சம்பிரதாய பூர்வமாகத் தொடங்கி வைப்ப

## 21-ம் நூற்றாண்டை நோக்கி ஐ. தே. க வளர்க்கப்பட வேண்டும்

**- ரணில் விக்கிரமசிங்க**

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியானது மக்களால்ஏற்கப்படக்கூடியதும் தேர்தலுக்கு முகம் கொடுக்கக் கூடியதும் ஆகும். எனினும் கட்சியை இருநோக்கத்திற்காக மறுபடியும் பார்க்க வேண்டியுள்ளது. இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜாவத்தை வீதியிலுள்ள அவரது தனிப்பட்ட இல்லத்தில் தம்மை சந்தித்த நண்பர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் எமது கட்சியில் குறிப்பிடத்தக்க சில குறைபாடுகள் உள்ளன. எதிர்க்கட்சியாக செயற்படும் போது எமது குறைபாடுகளை திருத்திக்கொள்ளும் சந்தர்ப்பம் அதிகமாக இருக்கும் நான் தேர்தல் பிரசாரத்தின் போது அடிக்கடி வலியுறுத்தி வந்ததைப்போல 21ஆம் நூற்றாண்டிற்காக எமது சிந்தனையை ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும் முன் நோக்கியே பார்க்க வேண்டும். நாம் ஊக்கம் இழப்பதற்கு எதுவுமில்லை எனவும் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதியுடன் செயற்படுவதில் தடை எதுவும் இல்லை

**சந்திரிகா குமாரணதுங்க**

(கொழும்பு)

ஜனாதிபதியுடன் இணைந்து செயலாற்றுவதில் தடையெதையும் காணக் கூடியதாக இல்லை என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளருக்கு வழங்கிய பேட்டியொன்றில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். இப்படியான நல்ல உறவு நிலை மேலும் தொடருமெனத் தெரிவித்த அவர், ஜனாதிபதி சந்தோஷமான பாதுகாப்பு அமைச்சருமாவார் எனவும் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதிலும் தகவல் தொடர்புச் சாதனங்களின் சுதந்திரமான இயக்கத்திற்கும் முன்னுரிமை அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாணின் விலையை ரூபா 3. 50 ஆக குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

(தொல்புரம்)

தேசிய சர்வோதய சிரமதான இயக்க ஆதரவுடன் இயங்கி வரும் சுழிபுரம் மேற்கு கலைமகள் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது

எதிர்வரும் 27- ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1. 00 மணியளவில் ஐயனார் ஆலய அருகாமையில் இவ்விளையாட்டுபோட்டி நடைபெறும்.

### மாறாத மனங்கள் நூல் வெளியீட்டு விழா

(தொல்புரம்)

தொல்புரம் விக்னேஸ்வரா சனசமூக நிலைய வாசகர் வட்ட பேராளர் திரு தி.உதயசூரியன் அவர்களின்'மாறாத மனங்கள்'' சிறுகதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய

**அசிற் வீச்சு சம்பவம்**

## முன்னாள் அமைச்சர் மீது பொலிசார் விசாரணை

[கொழும்பு]

பொதுத்தேர்தலின் பின்பு ஜா எல பொலிஸ் பகுதியில் இடம்பெற்ற அசிற் வீச்சு சம்பவம் ஒன்றுபற்றி விசேட பொலிஸ் கோஷ்டி ஒன்று முன்னாள் அமைச்சர் ஒருவரை விசாரிக்கவுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இந்த முன்னாள் அமைச்சருடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் எனச் சொல்லப்படும் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு இம்மாதம் 30-ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அசிற் வீச்சுச் சம்பவத்தின்போது ஒரு பொலிசார் காயமுற்றார் இச்சம்பவத்தில் காயமுற்ற மேலும் ஐவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்

### ஒய்வூதிய வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி திணைக்கள, ரயில்வே ஊழியர்களுக்கான ஒய்வூதிய வவுச்சர்கள இன்று வந்துசேரும் என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## ஐ.தே.க ஆதரவாளர் மீது திட்டமிட்ட தாக்குதல்

பொதுத்தேர்தலின் பின்னர் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் திட்டமிட்டு ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் மீது மிரட்டல் மற்றும் தாக்குதல் நடத்தி வருவதாக ஐக்கிய தேசியக்கட்சி பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

'லங்கா தீப' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியொன்றில் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் இதனால் ஐக்கிய தேசியக் கட்சி

**11 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட**

## பழமையான கணேசர்சிலை பொலநறுவையில் மீட்பு

## பாரதிவிழா நடத்த பிரதேசசபை ஏற்பாடு

(தொல்புரம்)

''என்று தணியும் எங்கள் சுதந்திரதாகம்' என்று பாட்டிசைத்து, மக்களிடத்தில் சுதந்திர தாகத்தை வேட்கையாக வளர்த்து வெற்றிக்கு வழிவகுத்த சுப்பிரமணிய பாரதிக்கு வலிமேற்கு பிரதேசத்தில் மாபெரும் விழா ஒன்றினை கொண்டாட பிரதேச சபையினர் திட்டமிட்டுள்ளனர்.

விடுதலை விரும்பி நிற்கும் இக்காலகட்டத்தில் அவன் கூறியகருத்துக்களை மீளாய்வு செய்ய மக்கள் மயப்படுத்தல் பெரிதும் ஏற்புடைய தொன்றாகக் கருதி இந்த விழாவினை பிரதேச மட்டத்தில் எழுச்சிகரமாக கொண்டாட அனைத்து சமூக மேம்பாட்டு நிறுவனங்கள்,அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள், நலன் விரும்பிகள் மற்றும் அனைவரையும் ஒத்துழைக்குமாறு வலிமேற்கு பிரதேச சபையினரும், கலாச்சாரக் குழுவினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி எழுச்சிமிகு ''பாரதி விழாவை'' அடுத்த மாதமுற்பகுதியில் கொண்டாடுவதற்காக அங்கு நிகழவுள்ள இயல், இசை, நாடகம் போன்ற பல முக்கிய நிகழ்வுகள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும், எமது பிரதேச மக்களின் பூரண ஒத்துழைப்புடன் நடாத்தப்படும் இந்த விழாவினை சித்தன்கேணி நகரில் கொண்டாடுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும், பாரதி விழா அமைப்புக் குழுவின் தலைவரும், விசேட ஆணையாளரும், மேலதிக அரசாங்க அதிபருமான திரு. கா. சந்திரராசா அவர்கள் தெரிவித்துள்ளார். (41)

## பதவிஉயர்வு,நியமனங்களில் அரசியல் தலையீடு இருந்தது

**அ. சே. ஆணைக்குழு செயலர் கூறுகிறார்**

அரசாங்க உத்தியோகத்தர்களை நியமனம் செய்யும் போது அல்லது பதவி உயர்வு வழங்கும்போது, அரசியல்வாதிகள் மேற்கொண்ட தலையீடுகள் குறித்து சாட்சியமளிக்க தான் தயாராக உள்ளதாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளர் சி. சுதரசிங்க தெரிவித்தார்.

இது குறித்து ஆராய விசாரணைக்குழு அமைக்கப்பட்டால் தான் அதன்முன் சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் லங்காதீப பத்திரிகைக்கு தெரிவித்தார்.

மேலும் இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள், பதவி உயர்வுகளில் அரசியல் தலையீடு இருந்ததாக அவர் கூறினார்.

### அறிவியல அரங்கு

தென்மராட்சி பிரதேச சபை நூலக அபிவிருத்தி சபையினரால் மாதாந்த அறிவியல் அரங்கு எதிர்வரும் ஞாயிறு பி. பகல் 3 மணிக்கு யா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் இடம் பெறும்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 08 - 25 வியாழன் இரவு**

8 01- சொல்லுங்கள் பார்க்கலாம்
8.10- சித்த மருத்துவக் குறிப்புகள்
8.20- உழைப்போம் உயர்வோ
 ' சுண்ணாம்பு உற்பத்தி தொடர்பான கேள்விபதில்
8.30- செய்திகள்
8.40- ஏட்டிலிருந்து - இயற்கை சமுதாயம் விஞ்ஞானம் என்ற நூலிலிருந்து ''விண்ணைப்பார்த்தால்'' எனும் கட்டுரையின் சில பகுதிகள்

புதிய அரசாங்கத்தின் புதிய பாராளுமன்றக் கூட்டத் தொடரை சம்பிரதாய பூர்வமாகத் தொடங்கி வைப்பதோடு, புதிய அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையையும் வாசிக்க வேண்டியதும் அவரது கடமையாகும்.

ஜனாதிபதி டி பி விஜேதுங்கா ஐ. தே. கட்சியைச் சேர்ந்தவராக இருக்கலாம். அதன் பாராளுமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்கலாம். ஆனால் அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் சிறிலங்காவின் ஜனாதிபதி என்ற உயர்ந்த ஸ்தானத்திற்குச் செல்கின்றார். இந்நிலையில், அவருக்கு விருப்பு வெறுப்பு என்பதை விட கடமைகளும், சம்பிரதாயங்களுமே முக்கியமானவையாகும்.

இவற்றிற்கும் மேலாக, ஒரு உயர் பதவியில் இருப்பவர் தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியாதவராக இருப்பது அவரின் அந்தஸ்திற்கும் கௌரவத்திற்கும் இழுக்கானதாகும். சுமார் 16 வருட காலத்தில் எதிர்க் கட்சியாக இருந்து ஜே ஆர் ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோரின் ஒடுக்குதலுக்கு உள்ளாகி வெறுத்துப் போயிருந்த நிலையில் கூட, சிறிலங்கா சுதந்திரக் கட்சி டி பி விஜேதுங்கா ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற போது கடைப்பிடித்த அரசியல் நாகரிகத்தைத்தானும் டி பி விஜேதுங்கா கடைப்பிடிக்காமல் போனது அவரது குறுகிய மனப்பான்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவே கொள்ள வேண்டியுள்ளது.

ஆனால், டி பி விஜேதுங்காவிடம் குறுகிய மனப்பாங்கும், குரோதத்தனங்களும் நிறையவே உள்ளன என்பதற்கு இதன் மூலம்தான் உதாரணம் காட்ட வேண்டும் என்பதல்ல. அவர் கடந்த 15 மாத ஆட்சியின் போதே பல்வேறு சந்தர்ப்பங்களில் இதை உணர்த்தியுள்ளார். இதற்குச் சிறப்பான உதாரணமாக அமையக் கூடியவை அவர் தெளிவாகவே கடைப்பிடித்த இனவாதக் கொள்கை ஆகும்.

ஆனால், டி.பி. யின் இந்நிலைப்பாடானது புதிய அரசாங்கத்திடம் அதிகாரம் கைமாறுவதையோ அன்றி புதிய அரசாங்கம் தான் கொண்டுள்ள கொள்கைகளையே அமுலாக்க முனைவதையோ முற்றாகத் தடுத்துவிடாது. இது சிறிலங்கா அரசியலில் குழப்பத்தையே விளைவிக்கும். அத்தோடு டி. பி. விஜேதுங்காவின் குறுகிய மனப்பாங்கிற்கு இது உதாரணமாகிவிடும். ஆனால், இது டி பி விஜேதுங்காவை எந்தளவிற்குப் பாதிக்கும் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், ஏறிவந்த ஏணியையே எட்டியுதைக்கும் பண்பு அவர் அரசியல் வரலாற்றில் ஓர் அங்கமாக முன்னரே உள்ளது. அதை விட இது ஒன்றும் பெரிதல்ல.

2 30 மணிக்கு தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் வலிமேற்கு பிரதேச சபையின் செயலாளர் திரு க. திரவியம் தலைமையில் நடைபெறும் இந்த நூல் வெளியீட்டு விழாவில் வலிமேற்கு பிரதேச . செயலரும் விசேட ஆணையாளருமான திரு. கா சந்திரராசா அவர்கள் ஆசியுரையினை வழங்குவார் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு, சுந்தரம் டிவகலாலா அவர்கள் வெளியீட்டுரையை வழங்கவுள்ளார். (41)

(பொலநறுவை)

இலங்கையின் முக்கோண கலாசாரப் பிரிவிற்குட்பட்ட பொலநறுவையில் கணேசர் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இச் சிலை பொலநறுவையிலுள்ள பழைமை மிகு கோவில் ஒன்றுக்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ள சிலைகளையும் விட மிகவும் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அந்நிய ஏகாதிபத்தியத்தின் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது என்றும் நம்பப் படுகிறது.

11ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்திற்குரியது எனக் கருதப்படும் இச் சிலை 65 சென்ரிமீற்றர் உயரம் கொண்டதாகவுள்ளது- பொலநறுவையில் இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ள சிலைகளைவிட சிறந்த உருவமைப்பை இச் சிலை கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

னால் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் பீதி அடைந்த நிலையில் காணப்படுவதாகவும் எனவே இதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து பரவலாக தகவல்கள் தமக்கு தொடர்ந்து கிடைக்கப்பெற்று வருவதாகவும் இது மிகவும் கவலை தருவதாகவும் மேலும் தெரிவித்தார்.

8 50- மலரும் மொட்டுக்கள்

1994 - 08 - 26
வெள்ளி காலை

7.02- மாவீரவணக்கம்
7.15- மணியாரம்
7.30- செய்திகள்
7.35- பத்திரிகைச் செய்திகள்.
7 40- தாயகப் பாடல்கள்

# அணுகுண்டு தயாரிக்கும் நிலையில் இந்தியா, பாகிஸ்தான் உள்ளது

## - அமெரிக்கா நம்பிகை

(வாஷிங்டன்)

பாகிஸ்தானும் இந்தியாவும் மிகவும் குறுகிய காலப் பகுதிக்குள் அணு ஆயுதங்களைத் தயாரிக்கக்கூடிய நிலையிலேயே இருப்பதாக அமெரிக்கா நம்புகின்றது

வாஷிங்டன் இது தொடர்பாக மேலும் கூறுகையில் பாகிஸ்தானிடம் அணு ஆயுதம் இருப்பதாக முன்னாள் பிரதமர் நவாப் ஷெரிப் விடுத்த அறிக்கையில் ஆச்சரியப்படக் கூடிய எதுவும் இல்லை எனவும் ஷெரிபின் கூற்று உள்ளூர் அரசியலுடன் தொடர்புடையது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

பாகிஸ்தானும் இந்தியாவும் தம்மிடம் அணுவாயுதம் எதுவும் இல்லை எனக் கூறி வருவது தெரிந்ததே

# இந்தியக் கிரிக்கெட்குழு இலங்கைக்கு வருகிறது

(புதுடில்லி)

அடுத்த மாதம் 4-ந் திகதி முதல் கொழும்பில் நடைபெறவிருக்கும், நான்கு முனை சிங்கர் உலகத் தொடர் கிரிக்கட்போட்டிக்கான இந்தியக் குழுவில், கபில்தேவ், மனோஜ் பிரபாகர் மீளவும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்திய அணியில் இடம் பெறுபவர்கள் வருமாறு, முகமட் அசாருத்தீன் (கப்டன்) சச்சின் டெண்டுல்கர் (உதவி கப்டன்), நவ்ஜோத் சிங்சித்து. மனோஜ் பிரபாகர், அஜெய் ஜடேஜா, வினோத் காம்ப்ளி' அத்துல் படேடா. நயான் மொங்கியா, கபில்தேவ், ஜவஹர் சிறிநாத், பிரிஷாந் வைத்யா, பிரசாத், அனில் கும்ப்ளே, வெங்கடபதிராஜூ ராஜேஷ் சௌகான் ஆகியோராவர்.

# சிறைச்சாலை மோதலில் பத்துப் பேர் உயிரிழப்பு

எல்சல்வடோரிலுள்ள மத்திய சிறைச்சாலையிலிருந்து தப்பிச் செல்வதற்கு கைதிகள் முயற்சித்த வேளையில், அவர்களுக்கும் சிறைக் காவலர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பத்துப் பேர் உயிரிழந்துள்ளனர்.

இரண்டாயிரத்து முந்நூறு கைதிகள் வைக்கப்பட்டிருந்த இச் சிறைக்கு சென்ற பொலிசாரும், இராணுவத்தினரும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக எல்சல்வடோர் பதில் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சென்ற ஆண்டு, நவம்பர் மாதம்முதல் எல்சல்வடோரில் இடம்பெற்றுவந்துள்ளதுசிறைச்சாலை மோதல்களில் இதுவரை நாற்பது பேர் வரை உயிரிழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அகதிகள் தரையிறங்குவதை கட்டுப்படுத்தும்

# அமெரிக்க நடவடிக்கைக்கு கியூபா ஆட்சேபம்

(ஹவானா)

படகு அகதிகளை அமெரிக்காவில் இறங்க விடாமல் றுவாண்டனாமோ கடற்படைத் தளத்துக்கு அனுப்பும் கிளிண்டனின் நடவடிக்கையை கியூபா ஆட்சேபித்துள்ளது

பெருமளவிலான கியூபா அகதிகளை வெளியே அனுமதிக்கும் ஜனாதிபதி காஸ்ட்ரோ மீது நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி அவரைத் தண்டிக்கும் அமெரிக்காவின் நடவடிக்கை குறித்து கியூபா உத்தியோக ரீதியில் இன்னும் கருத்து தெரிவிக்கவில்லை

ஆனால் அரசாங்கத்தின் கருத்தை பிரதிபலிக்கும் கியூபா செய்தி ஏஜென்சி தனது பிரஜைகளின் மனித உரிமையை வாஷிங்டன் மீறி வருவதாககூறியுள்ளது

பட்டினி மூலம் பெரும்பாலான கியூபா மக்களைத் தோற்கடிக்க முடியும் என அமெரிக்கா மீண்டும் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறது என அது மேலும் கூறியுள்ளது.

# சட்டசபைத் தேர்தல் ஜெயலலிதா ஆலோசனை

(சென்னை)

பாராளுமன்றத் தேர்தலுடன் தமிழக சட்டசபைத் தேர்தலையும் நடத்துவது குறித்து ஜெயலலிதா ஆலோசனை செய்து வருவதாக அதிமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழ்நாடு சட்டசபை பதவிக்காலமும், 96 ஜூன் வரையே உள்ளது. பாராளுமன்றத் தேர்தலுடன் சட்டசபைத் தேர்தலையும் நடத்துவதால் அரசுப்பணம்வீணாவதை தடுக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார் இது தொடர்பாக அதிமுக உறுப்பினர்களின் நிலைபற்றியும் ஜெயலலிதா கேட்டறிந்து வருவதாகவும் அதிமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கப்டன் அங்கயற்கண்ணி உருவப்படம் பெறலாம்

முதற் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி - புஸ்பகலா துரைசிங்கம், (மண்கும்பான் மேற்கு, வேலணை) இவரின் போஸ்ரர் படம் இன்று மாலையில் இருந்து சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலம் தமிழீழ மாவீரர்பணிமனையிலும், தமிழீழ மகளிர் மாவீரர் பணிமனையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

## சூடானகறி பரிமாறிய மனைவியின் தலைபிளந்தது

(யாழ்ப்பாணம்)

கறிசூடாக இருந்ததால் கணவனால் தாக்கப்பட்ட மனைவி தலையில் பலத்த காயத்திற்குள்ளானார்.

மதுபோதையில் மதிய உணவை உண்டுகொண்டிருந்தவர் மனைவி பரிமாறிய கறி சூடாக இருந்ததாகக் கூறி மனைவியைதடிகொண்டுதலையில்தாக்கியதாகவும் அதனால் அவரது தலை பிளந்து இரத்தம் பெருகிய நிலையில் அவர் மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டதாகவும் தெரியவருகின்றது. (சி)

## கைத்தொழில் வளர்ச்சிக்கு உலகவங்கி உதவும்

(கொழும்பு)

இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்திக்கு உலக வங்கி தொடர்ந்தும் உதவுவதாக தெரிவித்துள்ளது. கைத்தொழில்துறை அமைச்சர் சி. வி. குணரட்ண, உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையையடுத்து, இம்முடிவுக்கு உலகவங்கி வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 மாதங்களாக, உலகவங்கியினால் எந்த புதிய திட்டமும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் தற்போது 26 திட்டங்களுக்கு, 52 கோடி ரூபா பெறுமதியான உதவி வழங்கியுள்ளதாகவும் உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

## வீடமைப்பு கடன் வங்கி ஆரம்பிக்க நடவடிக்கை

### அமைச்சர் தகவல்

(கொழும்பு)

குறைந்த வட்டி விகிதத்தில் வீடமைப்பு கடன்கள் வழங்குவதற்கான வீடமைப்பு கடன் வங்கியொன்றை ஆரம்பிப்பதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக வீடமைப்பு, நிர்மாண பொது வசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் தொழில் கொள்வோர், மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் தமக்கு ஒரு வீடொன்றை இலகுவில் அமைத்து கொள்வதற்காக வாய்ப்பளிக்கும் நோக்குடன் இவ் வீடமைப்பு கடன் வங்கியை அமைப்பதற்கான உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மோசடிப் பேர்வழிகள் விரட்டிப் பிடிப்பு

புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் பெயரால் மக்களை ஏமாற்றி பணம் சேகரித்து வந்த மூன்று மோசடிப் பேர்வழிகள் உரும்பராய் பகுதியில் பொதுமக்களால் விரட்டிப் பிடிக்கப்பட்டனர்.

மேற்படி ஆலயத்தில் தாம் நேர்த்தி செய்து தருவதாக கூறி இவர்கள் பணம் திரட்டி வந்ததாகவும் சந்தேக முற்ற சில இளைஞர்கள் விரட்டிப் பிடித்து விசாரித்தபோது அவர்கள் உண்மையை ஒப்புக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அறிவித்தல்

# ஐ.தே.கவின் தோல்விக்கு ஐ.ஐ.தே.மு. காரணம்

- காமினி திசாநாயக்க

[கொழும்பு]

ஜனநாயக ஐ தே முன்னணி எதிர்க்கட்சிகளுடன் இணைந்து கொண்டமையே ஐக்கிய தேசியக் கட்சி தோற்கடிக்கப்பட்டமைக்கான பிரதான காரணமாகும். இவ்வாறு காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

தமது இல்லத்தில் தம்மை சந்தித்த உள் நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்களிடம் பேசிய அவர்மேலும் கூறுகையில், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை அப்போது ஐ தே கவில் இருந்த சில கடும் பிரச்சினைகளின் காரணமாக நானும், லலித் அத்துலத் முதலியும் ஆரம்பித்தோம். ஆனால் இப் பிரச்சினைகள் மறைந்ததும் நான் மீண்டும் ஐ தே கவில் இணைந்து கொண்டேன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஜனநாயக வழிமுறை செம்மையாவதற்கு அப்போது மிகுந்த துணை செய்தது.

அத்துடன் 17 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி செய்ததால் மக்கள் மத்தியில் ஒருவித அதிருப்தி பரவியிருந்ததும், அரசியலில் வன்முறையின் ஆதிக்கம் அதிகரித்து இருந்ததும் கூட ஐ. தே, க. தோல்விக்கு வழிவகுத்து விட்டது எனவும் குறிப்பிட்டார்.

## 3 மாகாணசபை உறுப்பினர் பொ.ஐ.முவில் இணைவு

ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று மாகாண சபை உறுப்பினர்கள் பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து கொண்டனர்.

வட மத்திய மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களான ஆர் பி. ஏ ஜோன்புள்ளே, எப். ஆர். எம். அபேசிங்கா ஆகியோர் நேற்று மாகாணசபை நடவடிக்கையின் போது இவ்வாறு இணைந்து கொண்டதாகவும் எஸ். எம். முத்துபண்டார விரைவில் இணைந்து கொள்வார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### அரச கூட்டுத்தாபனங்களை

## மக்கள் மயப்படுத்துதல் உடன் நிறுத்தப் பணிப்பு

(கொழும்பு)

உருக்கு கூட்டுத்தாபனம், அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம், கட்டடப்பொருட்கள் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை மக்கள் மயப்படுத்தும் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உருக்கு கூட்டுத் தாபனம் கடந்த ஆண்டில், 100 கோடி ரூபா இலாபத்தைப் பெற்றது. இந்த ஆண்டு இவ் இலாபத் தொகை இருமடங்காக அதிகரிக்கும் எனவும் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலாபத்தில் இயங்கும் கூட்டுத் தாபனங்கள், தனியார் மயப்படுத்தப்படக் கூடாது என வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வாவும் தெரிவித்துள்ளார்,

## செயலாளர் மாற்றம்

(கொழும்பு)

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக எஸ். டி. பியதாச நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக கடமையாற்றிய சீ. சதரசிங்காவின் பதவி விலகலை தொடர்ந்து இப் பதவிக்கு இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## நித்தம்புவ பகுதியில் துப்பாக்கி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

நித்தம்புவ பொலிசார் லம்பகறுவவில் உள்ள வீடொன்றில் இருந்து துப்பாக்கி ஒன்றினையும் தோட்டாக்களையும் கைப்பற்றினர்.

தெரியவந்துள்ளது,

இது சம்பந்தமாக முன்னாள் அமைச்சர் ஒருவரின் அந்தரங்கச் செயலாளரும், சார்ஜன்ட் ஒருவருமே பொலிசாரால் தேடப்படுகின்றனர்

## அநீதிக்கு உட்படுவோருக்கு நீதி கிடைக்கச் செய்வோம்

### பேராசிரியர் பீரிஸ்

அநீதிக்கும் அநியாயத்திற்கும் உட்படுவோர் நேரடியாகவே முறையிட்டுநீதி நியாயம் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் சட்டமூலமொன்று கொண்டு வரப்படவுள்ளது. தற்போது ஒருவருக்கு இழைக்கப்படும் அநீதி பற்றி பாராளுமன்ற குழு மூலம் தான் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு முறையீடு செய்ய முடியும். இக் குழுவின் உறுப்பினர்களில் அதிகமானோர் அரசாங்க கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதலால் முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்படாமல் நிராகரிக்கப்படக் கூடியதாய் உள்ளது. வெளிநாட்டு வர்த்தகம், நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் நேற்று முன்தினம் தமது அமைச்சில் பதவி ஏற்றபோது இவ்வாறு கூறினார்.

அரசியல் தலையீடு இல்லாமல் சகல அதிகாரிகளும் கடமைகளைச் செய்யக்கூடிய வகையில் சட்டங்களைக் கொண்டுவருவோம் என்றார்.

எம்முடைய இளைஞர்கள் மத்தியில் விரக்தி நிலவுகிறது. இந் நிலையை மாற்ற பொ. ஐ. மு. அதிக அக்கறை காட்டுகிறது.

# முன்னாள் ஐ.தே.க அமைச்சர்களை விசேட இலஞ்ச கமிஷன் விசாரிக்கும்

- அமைச்சர் பேராசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

வெகுவிரைவில் நியமிக்கப்பட இருக்கும் விசேட இலஞ்சக் கமிஷனால் முன்னாள் அமைச்சர்கள் உட்பட ஐ தே. கவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் விசாரிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ள புகார்கள் சம்பந்தமான பைல்கள் இலஞ்ச ஆணையாளரிடம் உள்ளன. இலஞ்ச ஊழல்கள் குறித்து விசாரிப்பதற்கு உயர்மட்ட ஆணைக்குழு ஒன்று நியமிப்பதற்கும் அடுத்த ஏழு வாரங்களுக்குள் சட்டம் இயற்றப்படும். இந்த ஆணைக்குழு பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாக இருக்கும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக இலஞ்ச ஊழல் புகார்கள் குறித்து விசாரிப்பதற்கு சபாநாயகரின் அனுமதி பெறல் வேண்டும் என்ற தற்போதைய விதி நீக்கப்படும் என்று நீதி அரசியல் விவகார வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கூறியுள்ளார்.

இந்த ஆணைக்குழு மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாகும். இருவர் ஓய்வுபெற்ற சுப்ரீம் கோட் நீதிபதிகளாகவும் மூன்றாவது நபர் விசாரிப்பதில் அனுபவமுள்ளவராகவும் இருப்பார் எனவும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

இந்த ஆணைக்குழுவிற்குப் பூரண அதிகாரங்கள் இருக்கும்இதுசுதந்திரமாகஇயங்கும் இந்த ஆணைக்குழு பணிபுரியும் காலத்தில் ஆணைக்குழுவினரின் சம்பளம் குறைக்க அமைச்சர் சொன்னார்.

தனக்குக் கிடைக்கும் புகார்கள் அனைத்தையும் ஆணைக்குழு விசாரிக்கும். விசாரிக்கப்படாதிருக்கும் புகார்களையும் ஆணைக்குழு விசாரிக்கும்.

விசேட இலஞ்ச ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என்று திருமதி சந்திரிகா குமாரணதுங்க தேர்தல் பிரசாரத்தின் போது கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடற்படையினர் தாக்குதல் மீனவரைக் காணவில்லை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல்களில் மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

நேற்றுக்காலை 5.30 மணியளவில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது கடற்படையினர் கடும் தாக்குதல்களை மேற்கொண்டனர். கடும் தாக்குதல்களை அடுத்து மீனவர்கள் தமது தொழில்களை கைவிட்டு கரைசேர்ந்தனர்.

இத்தாக்குதலில் மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார். காணாமல் போனவர் கடற்படையினரால் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது பிடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. குறித்த மீனவரின் கட்டுமரமும் கடற்றொழில் உபகரணங்களும் ஏனைய மீனவர்களால் மீட்டுக் கரைசேர்க்கப்பட்டன.

நாகர்கோவிலைச் சேர்ந்த சேதுலிங்கம் ராமு (வயது 20) என்ற மீனவரே இவ்வாறு காணாமல் போனவர் ஆவார்.

## வீடு பார்க்கச் சென்றவர் துப்பாக்கிச்சூட்டிற்குப்பலி

[யாழ்ப்பாணம்]

வீடு பார்க்கச் சென்றவர் மீது சிறிலங்கா படையினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

நேற்று பண்டத்தரிப்பில் வீடுபார்க்கச் சென்றசுதுமலை தெற்கில் இடம் பெயர்ந்து வசித்து வந்த செல்லத்துரை திருநாவுக்கரசு[47] என்பவரே மேற்படி துப்பாக்கிச் சூட்டுசம்பவத்தின்போது பலியாகியுள்ளார்.

## பொ.ஐ.மு·வை ஆதரிக்க

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் மைதான விரிவாக்கத்திற்காகவும், அபிவிருத்திக்காகவும் இன்னிசை நிகழ்ச்சியினை நடாத்தி சேகரித்த ரூபா (3 1/2) மூன்றரை இலட்சம் மைதான விரிவாக்க நிதி என்ற பெயரில் வங்கியில் வைப்பிலிடப் பட்டுள்ளது. இதில் பங்களித்த அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். காணிக் கொள்வனவிற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்பதையும் மகிழ்வுடன் அறியத் தருகின்றோம். மேலும் இதற்கு பங்களிப்புச் செய்ய விரும்பும் அன்பர்கள், நலன்விரும்பிகள் தங்கள் பங்களிப்பினை யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் எமது கணக்கிலக்கம் 6690 இல் வைப்பிலிடுமாறு அன்புடன் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

யாழ் இந்து பழைய மாணவர் சங்கம்

(சி-10172)

சம்பூர்ண அரிச்சந்திரா நாடகம்

இடம்: பளை தம்பகாமம் நெழியாய் விநாயகர் கோயில்

காலம்: 26 - 8 - 94 இரவு 9 மணி

நடிப்பு: பளை ஸ்ரீரங்க கானசபா - கே. கனகரத்தினம், வீ. செல்வரத்தினம் குழுவினர்

அனைவரும் வருக

(சி-10174) - ஆலய நிர்வாகத்தினர்

யாழ். ஸ்ரீதரில்

அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் தினசரி காலை 10-30 மணிக்கு

"மண்ணுக்காக"

இன்று மட்டும் மாலை 4 00, 6.00 மணிக்கு

BRADDOCK

MISSING IN ACTION III

நாளை முதல்

தினசரி மாலை 4.00, 6.00 மணிக்கு

CIRCUS

(சி-10173)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

றினையும் தோட்டாக்களையும் கைப்பற்றினர்.

இது தொடர்பாக கிராம சேவகர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட துப்பாக்கி முன்னாள் அமைச்சர் ஒருவரின்பாதுகாப்புஅதிகாரியினால் உபயோகிக்கப்பட்டதென விசாரணைகளில் இருந்து

### வடபகுதி

கள் பெரிய அளவில் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் இதனை தான் நன்குணர்ந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்ததாகவும் கூறியது

நீண்ட காலமாக நடைபெறும் யுத்தத்தினால் ஏற்பட்டது உயிர் இழப்பும், சொத்து இழப்புக்கள் மட்டுமே என்றும் இதனை நிறுத்துவதற்கான அரசியல் தீர்வொன்றை மேற்கொள்வதற்கு புதிய அரசாங்கம் சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும்எனவும்அமைச்சர்தெரிவித்ததாக மேலும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது

இது குறித்து சிறிலங்கா ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் தெரிவிக்கையில் யாழ் குடாநாட்டில் பொருள்களுக்கு தட்டுப்பாடுகள் நிலவுவதால் மக்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர். உணவுப் பொருள்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களையும் அங்கு கொண்டுசெல்லப்படுவதில் ஏற்படும் தடைகளை நீக்குவதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்ததாகக் குறிப்பிட்டது.

### அரசாங்கத்தின்

ஆயினும், பேச்சுவார்த்தைக்கென அதிகாரபூர்வ தகவல் விடுதலைப் புலிகளிடமிருந்து வரும் வரையில் இப்போதைய இராணுவ நிலைகளில் எவ்வித மாற்றமும் இருக்காது எனவும் அவர் தெரிவித்தார்-

சார்ஜன்ட் ஒருவருமே பொலிசாரால் தேடப்படுகின்றனர் என்றும் பொலிஸ் சுப்பிரின்டன் கூறினார்.

### பாராளுமன்ற

தவர்களும் சபாநாயகரின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொள்வர். இதனையடுத்து பிரதி சபாநாயகரும் பிரதிக் குழுக்கள் தலைவரும் தெரிவுசெய்யப்படுவர்.

இப் பத்தாவது பாராளுமன்றத்தில் மொத்தம் 225 அங்கத்தவர்கள் உள்ளனர். இவர்களில் 106 பேர் புதியவர்கள், இந்தப் பாராளுமன்றத்தில் பிரதம மந்திரியும் வேறு இரண்டு அமைச்சர்களும் உட்பட 11 பெண் அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள்

### யாழ்

மருதமுனையிலிருந்து பொத்துவில் வரையிலான கடற்கரைப் பிரதேசங்களில். துறைமுகம் அமைப்பதற்கான இடம் தெரிவு செய்யப்படும். அம்பாறை மாவட்டத்தில் 41 சதவீத முஸ்லிம்களும் 41 சதவீத சிங்களவர்களும் 18 சதவீத தமிழரும் வாழ்கின்றனர் என்றார்.

### வடக்கு-கிழக்கு

இவ் இருவரும் விரைவில் தமதுபதவிகளை ஏற்றுக்கொள்ள இருப்பதாகவும் மேலும் தெரிய வருகிறது.

### லேக்ஹவுஸ்

கின்றது-

இதேவேளை பணிப்பாளா சபையின் புதிய உறுப்பினர்களாக பேர்சிவிக்கிரமசேகரா, லக்ஸ்மன் ஜெயசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்-

திரு லயனல் பெர்னான்டோ ஐ- தே- க- அரசாங்கத்தில் வடக்கு-கிழக்கு ஆளுநராக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது-

இந்த ஆணைக்குழு பணிபுரியும் காலத்தில் ஆணைக்குழுவினரின் சம்பளம் குறைக்கப்படமாட்டாது எனவும்

### கடற்கரும்புலி

பண்டிதர் வித்தியாலயத்தில் மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காகவைக்கப்பட்டு இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுறத் தொடர்ந்து உருவப்படம் ஊர்தி பவனியாக ஞானபண்டிதர் வித்தியாலயத்திலிருந்து கொக்குவில் சந்தியை அடைந்து ஆடியபாதம் வீதியூடாக திருநெல்வேலிச் சந்தி, பழம் சந்தியை அடைந்து இராசபாதையால் திரும்பி கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு, இறுதி இராணுவ மரியாதையுடன் நினைவுக்கல் நாட்டப்படும்.

### சபாநாயகர்

கும் நடவடிக்கை என அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அமைச்சு பதவி கிடைக்காத நிலையில் உள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள் அனுரா பண்டாரநாயக்காவை ஆதரிக்கலாம் என்ற நிலையிலேயே அனுரா பண்டாரநாயக்கா சபாநாயகர் பதவிக்கு போட்டியிடுவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்

இதேவேளை அனுரா பண்டாரநாயக்காவை விரும்பும் பல உறுப்பினர் இன்னும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருப்பதாகவும் ஆகவே இரகசிய வாக்களிப்பில் இவர்கள் அனுரா பண்டாரநாயக்காவுக்கு சார்பாக வாக்களிக்கக்கூடும் என்ற நம்பிக்கையின் கீழ் ஐ தே க அனுராபண்டாரநாயக்காவை போட்டியிடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது எனவும் அவர்கள் கூறுகின்றனர்

## பொ.ஐ.மு. வை ஆதரிக்க புளொட்குழு முடிவு

(கொழும்பு)

சபாநாயகர் பதவிக்கு போட்டியிடும் ஐ தே.கவின் வேட்பாளரை தாம் எந்த நிலையிலும் ஆதரிக்கத்தயாராக இல்லை என ஜனநாயக ஐக்கிய விடுதலை முன்னணியின்தலைவர்த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்-

இன்றைய தினம் பொது ஜன ஐக்கிய முன்னணிசார்பில் சபாநாயகர் பதவிக்கு யார் போட்டியிடுகின்றாரோ அவருக்கே தமது வாக்குகளை வழங்க தாம் முடிவு செய்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்-

## த. வி. கூ. ஆதரிக்கும்

இன்று நடைபெறவுள்ள சபாநாயகர் தெரிவு தொடர்பாக நடைபெறும் இரகசிய வாக்கெடுப்பில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளருக்கு சார்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி வாக்களிக்க இருப்பதாக அதன் நிர்வாகச் செயலாளர் தங்கத்துரை தெரிவித்துள்ளார்

### பொருளாதார

ருக்கும் விடுதலைப் புலிகளை நெருக்கவே இத்தடை முன்னர் போடப்பட்டது.

உள்நாட்டுப் போருக்கு ஓர் அமைதித் தீர்வு காண்போம் என்ற புதிய அரசின் உறுதிக்கு இதுவும் ஒரு அறிகுறி.

தலைமை அமைச்சராக பதவியேற்ற சந்திரிகா குமாரணதுங்க புலிகளுக்கு தான் நேசக்கரம் நீட்டுவதாக தெரிவித்தார். இந்த நிலையில் இது ஒரு பேச்சுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பாகவே அரசு கருதுகிறது என்று தெரிகிறது.

இலங்கை சட்ட அமைப்புப் படி பார்த்தால் பொருளாதார தடையை அகற்ற புதிய அரசுக்கு அதிகாரம் கிடையாது. பாதுகாப்பு அமைச்சுத் தான்இந்த தடையை முதலில் கொண்டு வந்தது. ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவே பாதுகாப்பு அமைச்சராக இருக்கிறார்- பொருளாதார தடையை அகற்ற வேண்டும் என முன்பு கேட்ட போதெல்லாம் விஜேதுங்க அதை மறுத்தே வந்துள்ளார், இவர் தனது புதிய அமைச்சரவை கொண்டு வரும் சட்ட மற்றும் அரசியல் திருத்தங்களுக்கு தடையாகவே இருப்பார் என ஆரம்பத்தில் கருதப்பட்டது- ஆனால் அப்படி எதுவும் நடப்பதற்கான பலமான அறிகுறிகள் எதுவும் இப்போது தென்படவில்லை என்றே கூறவேண்டும்- என்றார்-

### எதிர்க்கட்சித்

நாயக்காவுக்கு கிடைக்கப் பெற்று விட்டதாக அவர் விளக்கினார்.

இதுவரை பிரதித் தலைவர் பதவியை ரணில் விக்கிரமசிங்கா வகித்தார் என்றும் இனிமேல் இப்பதவி இவரிடம் இருந்து தானாகவே பெறப்பட்டு விட்டதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இரகசிய வாக்கெடுப்பு தொடர்பான முடிவுகள் காமினி திசாநாயக்காவுக்கும், ரணில் விக்கிரமசிங்காவுக்கும் மட்டுமே காண்பிக்கப்பட்டதாக ஐ. தே. க. வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

### இ. தொ. கா.

க- சார்பில் போட்டியிட்டபோதிலும் தாம் பாராளுமன்றத்தில் தனித்து இயங்குவது என எடுத்த முன்னைய முடிவில் எதுவித மாற்றமும் இல்லை என்றார்-

எனினும் இன்று காலை நடைபெறும் பாராளுமன்ற கூட்டத்திலேயே இறுதிமுடிவு எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்-